தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 21-9-57 | சனிக்கிழமை | இதழ் 12

★ ரா. பி. சே.யின் போர்ப் பரணி! ★

மறைமலையார் திருப்பெயர்க்கீழ் பெரும்புலவர் தமிழ் முழக்கம்

எத்தனை எதிரிகள் கச்சை கட்டிக்கொண்டு வரிசை வரிசையாக நின்று எதிர்த்தாலும், திறமையும் தனித்தன்மைகளும் பெற்றவர்கள் எதிரிகளை முறியடித்து ஓங்கு புகழ் எய்தியிருக்கிறார்கள். தமிழறிஞர் **மறைமலையடிகளார்** அவர்கள் அந்த வகையில் வெற்றிவீரராகத் திகழ்ந்தவராவார்கள். தமிழ்ப் புலவர்களிடையேயும், மொழியாராய்ச்சித்துறையிலும் அவருக்குத்தனிச்சிறப்பு இருந்தது. காரணம், தமிழின் தனிச் சிறப்பை அவர் எடுத்துக்காட்டினார்; நாடெங்கெணும் பரப்பினார். அதனால் தமிழ் அவருக்குத் தனிச்சிறப்பை அளித்தது.

மேனாட்டுப்புலமை பெற்ற எத்தனையோ தமிழ்ப்புலவர்கள் மேல் நாட்டு முறையிலேயே வாழ்வதைக் காண்கிறோம். மேனாட்டு மொழி வளர்ச்சிக்கே அவர்கள் உழைக்கிறார்கள். ஆனால் மறைமலை அடிகளார் மேனாட்டுப் புலமை பெற்றிருந்தாலும், தமிழ் வாழவும், தமிழின் பெருமை உலகமெலாம் பரவவுமே தன் ஆராய்ச்சியைப் பயன்படுத்தினார்கள்.

தமிழகத்தில் வேறு வேறு கொள்கைகளையுடைய எத்தனை அரசியல் கட்சிகள் இயங்கிவந்தாலும், மறைமலை அடிகளாரின் மொழியாராய்ச்சியை வேறு வேறு கொள்கைகளையுடைய எந்தக்கட்சியினரும்—எந்த மதத்தினரும் ஏற்றுக் கொள்ளத் தயங்கியதில்லை.

வடமொழி பயின்றவர்கள் அரசியல் துறையிலும் இசைத் துறையிலும் செல்வாக்குப்பெற்றுத் திகழ்ந்த காலத்தில், எத்தனையோ தமிழறிஞர்கள் தக்கதோர் முன்னோடி இல்லாமல் தயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில், காலத்திற்கேற்ற வகையில், வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வடமொழி கற்று வாய்ப்பறை அடித்துக் கொண்டிருந்தவர்களை மண்டையிலடித்து அயரவைத்த பெருமை மறைமலை அடிகளைச் சாரும். "தமிழுக்குப் புறம்பான மொழிகளை ஆராய்ந்துதான் சொல்லுகிறேன். தமிழுக்குள்ள சிறப்பு வேறு எந்த மொழிக்கும் இல்லை. இதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று வடமொழிப்பித்தர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார் மறைமலையடிகளார்.

வேறு எந்த மொழியிலும் இல்லாத—காணப்படாத, தமிழ் மொழியிலே மட்டும் காணப்படும் சில இயல்பான சிறப்புக்களை எடுத்துக்காட்டியவர் மறைமலையடிகளார்தான்.

மக்களுக்கு மகிழ்ச்சி வந்த காலத்தில் உணர்ச்சிவயப்பட்டுப் பாடுவது உண்டு. இது தமிழகத்திலேதான் உண்டு. தமிழர் இல்லங்களில் **ஒப்பாரி** என்று வழங்கப்படுவது அந்த வகையைச்சார்ந்ததுதான். இதை எடுத்துக்காட்டியவரும் மறைமலை அடிகளாரேயாவார்கள்.

"மன அசைவானது அழுகையின் மூலம் வெளிப்படுகிறது. பாடலின் மூலம் இன்பத்தை—துன்பத்தை—அழுகையை அந்நாளில் புலப்படுத்தினார்கள். இந்த ஓசை, வடிவிற்குவந்த பிறகு வெறும் இசையைக்கலவாமல் பாடுவதில்லை. இயலோடு கூடவே இசையையும் ஒருங்கு சேர்த்த — அதாவது இயல் இசை ஒருங்கு நடைபெற்ற காலம்தான் மிக உயர்ந்த காலம். சிலப்பதிகாரம் என்னும் காவியம் பாட்டின் சிறப்பை அறிந்துதான் பாடப்பட்டது"—இதைச் சொன்னவரும் அவர்தான்.

ஓம் என்ற சொல்லுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளைச்சொன்னார்கள். அவர்கள், 'சொன்னபொருள்களெல்லாம் அவரவர்களுடைய மனநிலைக்கு ஏற்ப அமைந்திருந்தன. சுற்றுச்சார்புகளை ஒட்டி வடிவம் பெற்றிருந்தன. நாட்டவருக்கு விளக்கந்தரத்தக்கதாகவோ அந்த விளக்கம் கேட்டு கேட்பவர்கள் மனநிறைவுபெறத் தக்கதாகவோ யாரும் கூறவில்லை. ஆனால் மறைமலை அடிகளார் அவர்கள் சொன்னார்கள்.

"முதன்முதலில் ஓசையிலிருந்து தான் மொழி பிறந்தது. மக்கள், ஓசையை உண்டாக்காத காலத்தில் இயற்கையாகவே ஓசை உண்டாயிற்று. முதன் முதலில் ஏற்பட்ட ஓசை "ஓம் ஓம்"என்பதாகும். கடலோசையைப் பாருங்கள், "ஓம்" என்று கேட்கும். சங்கை ஊதிப் பார்த்துக் காதில் வைத்துப் பாருங்கள். அமைதியாகக் கடலோசையும் சங்கோசையும் கேட்டால், "ஓம்" என்ற ஓசை நன்கும் புலப்படும். உள்நோக்கிப் பார்த்தாலும் இந்த 'ஓம்' ஓசை நன்கு புலனாகும். மக்கள் இல்லாத காலத்திலிருந்து இயற்கையினிடம் ஓசை இருந்ததோடு இப்போதும் அந்த 'ஓம்' என்ற ஓசை இயற்கையினிடம் இயற்கையாய் இருந்து வருகிறது. இதை இப்போதும் பார்க்கலாம்.

'ஓம்' என்ற இந்த ஓசையிலே நாம் அறிந்துகொள்ளக்கூடிய பொருள் விளங்கவில்லை. அந்தக் காலத்தில் ஒருவர் கருத்து மற்றொருவருக்கு ஒத்திருந்தால் முதலில் 'ஓம்' என்றும், பிறகு 'ஆம்' என்றும் சொல்லிவந்தார்கள்.

அகரத்துக்குத்தான் வாயைத் திறந்து சொல்லவேண்டும்.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்று ஆசிரியர் திருவள்ளுவனார் சொன்னார். 'அ' என்று பிறக்கிறதும், 'ஆ' என்று அழுகிறதும், 'ஓம்' என்ற ஓசையிலேயே ஆரம்பிக்கிறது. எல்லாவற்றையும் உள்ளடக்கி முதலாய் நிற்பது 'ஓம்' என்ற முதல் ஓசையே.

உலகம் 'ஓம்' என்ற ஓசையிலிருந்துதான் பிறந்தது. இந்த 'ஓம்' என்ற ஓசையானது தமிழுக்கு மிகவும் சிறப்புடையது. நீக்ரோக்களும் இந்த 'ஓம்' ஓசையைப் புகழ்ந்து பேசுகிறார்கள். 'ஓம்' என்ற ஓசையை முதன் முதலில் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே அல்லாமல் பிறர் அல்லர்.

'ஓம்' தமிழுக்காகவே எழுதப்பட்டது" என்று விளக்கிச் சொன்னவரும் மறைமலை அடிகளேயாவார்கள்.

இத்தகு பேராற்றல் பெற்ற மறைமலைஅடிகளார் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவுநாள் சென்ற ஞாயிறன்று சென்னையில் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. தமிழறிஞர் பலர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, மறைமலை அடிகளாரின் தமிழ்த்தொண்டைப் பாராட்டினார்கள். அவரது துணிவை விளக்கினார்கள். கலந்துகொண்டவர்களின் சொற்பொழிவு, வந்திருந்தவர்கள் அனைவருக்கும், ஒவ்வொருவர் கையிலும் வாளையும் கேடயத்தையும் தந்து 'தமிழைப் பழிப்போரை வீழ்த்து' என்று கட்டளையிடக்கூடியதாக இருந்தது. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பேச்சு,

— 8-ம் பக்கம் —

எழிற்றமிழ் இல்லாமல் இழிமொழி பொதுமொழி ஆவதா?

நாடோடி இலக்கியம்

கனிச்சாறே கட்டமுதே,

கானகத்து மாமயிலே!

இலக்கியம் என்றதும் சங்ககாலமும் சங்க இலக்கியங்களும்தான் நம் கண்முன் தோன்றுகிறது. சங்க இலக்கியங்களில் வைத்து எண்ணப்படாத, எண்ணப்பட வாய்ப்புப் பெருத எத்தனையோ தமிழ்க் கவிதைகள், பாடல்கள் தமது ஆசானுடைய வறுமை காரணமாக ஏற்பட்ட முயற்சியின்மையால் அழிந்தொழிந்தன. பல அழிந்துகொண்டும் வருகின்றன. அழிந்துகொண்டு வருகின்ற பாடல்களில் முக்கியமாக கிராமியப் பாடல்களை அதிக இடம் பெறுகின்றன.

கிராமியப் பாடல்கள் நெடுங்காலந் தொட்டே கிராமாந்தரக் கவிகளால் இயற்றப்பட்டு, கிராமாந்தர மக்களால் பாடப்பட்டு வந்திருக்கின்றன. இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியான சமீப காலத்திலுங் கூட இப்பாடல்கள் பிரசித்தி பெற்றிருந்ததாக சில முதியவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பாடல்களைத் தனிப்பட்ட ஒரு இடத்தில் மட்டுமேயல்லாது தமிழ்நாடு முழுவதுமே ஒரு காலத்தில் பாடி வந்திருக்கிறது. இப்பாடல்களை இயற்றிய கிராமியக் கவிகள் பெரும்பாலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களேயாகும். அவர்கள் படித்திருந்தாலும் ஏதோ திண்ணைப் பள்ளிகளில் ஒன்றிரண்டு வருடங்கள் மாத்திரமே படித்தவர்களாகத்தான் இருந்திருக்க முடியும் என்பதை அப்பாடல்களைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம். கிராமியப்பாடல்கள் இலக்கண வரம்புக்கு அப்பாற்பட்டது. சில இடங்களில் வரிசை பிறழ்ந்தும் காணப்படும். உயர்ந்த சொற்கள் அவைகளில் அதிகமாகக் காணப்படாது. பெரும்பாலும்நடைமுறையில் பேசப்பட்டு வரும் கிராமியச் சொற்களே அவைகளில் இடம் பெற்றிருக்கின்றன. சில இடங்களில் ஆபாசம் என்று கருதும்படியான கொச்சைச் சொற்களும் காணப்படும். என்றாலும் பாட்டின் சுவையிலும் கருத்தின் நிறைவிலும் சிறிதும் குறை காண முடியாது.

இம்மாதிரியான பாடல்களை மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியான பழனிச்சீமையில் இன்றும் கிராமிய மக்கள் பாடி வருவதைக் காணலாம். இப்பகுதியில் பாடல் இயற்றிய ஆசான்களை 'அண்ணாவி' என்று அழைப்பதுண்டு. அண்ணாவி என்று அழைக்கப்பட்டு வந்தஇக்கிராமியக் கவிகள் தங்கள் உள்ளத்திலெழுந்த எண்ணக் கனவுகளை, இன்பதுன்ப நினைவுகளை, ஆசைக் கற்பனைகளை எளிய பாடல்கள் மூலமாக அப்படியப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிருர்கள். இவர்களுடைய பாடல்களில் பெரும்பாலும் இடம் பெற்றிருக்கின்ற பொருள் **கிராமியக் காதல்** ஆகும்.

கிராமியப் பாடல்கள் பல பகுதிகளில் வாழும் மக்கள் பலவிதமான இசைகளில் பாடுகிருர்கள். கபிலை ஓட்டும் காளைகள் தெம்மாங்கு மெட்டில் பாடுவதைக் கேட்கலாம். வயல் வெளிகளில் கட்டிளங்குமரிகள் சிந்து மெட்டில் இசைப்பதைக் கேட்கலாம். நாற்று நடும் வயது வந்த தாய்மார்கள் குரவை மெட்டுகளில் பாடுவதைப் பார்க்கலாம். ஆடு மாடுகள் மேய்க்கும் சிறுவர்கள் தங்கரத்தின மெட்டுக்களில் பாடிக்களிக்கிருர்கள். அதுபோலவே **கோவை** என்ற ஒரு கிராமிய இசையும் கிராமியப் பாடல்களில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. பழனி, அதன் சுற்று வட்டாரக் கிராமங்களிலுள்ள நாட்டுப்புற வயோதிகர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் வீட்டிலோ அல்லது களத்து மேட்டிலோ கோவை என்று சொல்லக்கூடிய பாடல்களை நீட்டி இசைப்படுத்திப் பாடுவதுண்டு. கோவையை எவ்வளவு இழுத்து இசைப்படுத்துகிருேமோ அவ்வளவு இனிமையும் தருகிறது என்பதில் ஐயமில்லை. கோவையை நீட்டி இழுத்துப்பாடுவதற்கென்றே என்னவோ அதன் ஆசிரியர்கள் அப்பாடல்களில் 'அடியடியே' 'அடடடடா' என்ற அசைச்சொற்களை வைத்துப் பாடியுள்ளார்கள்.

கோவைப் பாடல்கள் ஒரு நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு பின்னப்பட்டு வருவதனுல் இப்பாடல்களுக்கே கோவை என்றாகி விட்டது.

இங்கு நமது கிராமியக்கவி அண்ணாவியின் கோவைக்கு இலக்கான ஒரு நிகழ்ச்சியைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

அது ஒரு மலைச்சாரல். மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. என்ன அவசரமோ மாடுகள் அவ்வளவு அவசர ஆத்திரமாக வெறுக் வெறுக்கென்று சத்தமிட்டு மேய்ந்து கொண்டிருந்தன. சற்று தூரத்திலே ஒரு இளைஞன் — ஆம்மாடுகளின் தலைவன். ஒரு பாறையின் மேல் உட்கார்ந்திருக்கின்றுன். ஏனே இளைஞன் கரங்களில் அவன் தாடைகள் ஊன்றிக்கிடக்கின்றன. பார்வையோ தாழ்ந்து நிற்கிறது. சற்று அருகில் சென்று கூர்ந்து நோக்கினுல் அவன் ஏதோ ஏக்கத்துடன் எதைப்பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கிறுன் என்று யூகித்துக் கொள்ளலாம். இளைஞனின் உள்ளத்திலே உற்சாகம் பிறக்கிறது. அது அவன் உள்ளத்திலே பிரதிபலிக்கிறது. அவன் வாயிலிருந்து ஒரு விசித்திர ஓசை வானைப்பிளக்கிறது. அடுத்த நிமிடம் மாடுகள் ஒன்று சேர்ந்தன. முதல் மாட்டைப்பின் தொடர்ந்து மற்றவைகள் கீழே இறங்கிவரத் தொடங்கின.

மலையடிவாரத்திலே ஒரு ஓடை. ஓடைதான் என்றாலும் தெளிந்த நீர் நிறைந்து சென்றுகொண்டிருந்தது. மாடுகள் எல்லாம் ஓடையில் இறங்கித் தண்ணீர் குடிக்கத் தொடங்கின. மாட்டுக்கார இளைஞன் வந்தான். ஓடையின் ஓரத்திலே திட்டுப்போல் நின்ற ஒரு பாறையின் மேல் ஏறி நின்றுன். சுற்றுமுற்றும் தன் கண்களை ஏவி எதையோ தேடினுன். முகத்தில் ஏமாற்றக்குறி காணப்பட்டது. திடீரென்று நீரின் சலசலப்பும் கிலுக்...கிலுக் வளை ஒலியும் கேட்கிறது. சப்தம் வந்ததிசையை நோக்கின கண்கள். தான் தேடிய பொருள் அடர்ந்து வளர்ந்து நின்ற சம்பைப்புற்களுக்கு மத்தியில் சற்று ஆழமான நீர்ப்பகுதியில் புனலாடிக் கொண்டிருப்பதையும், கரையில் அப்புனலாடும் பொருளுக்குப் பொருளான ஒரு புடவை கிடப்பதையும் காண்கிறுன். நெஞ்சிலே உவகைமட்டும் குடிப்புகவில்லை. அது கூடவே சிறிது வெட்கத்தையும் பயத்தையும்தான் அழைத்துச்சென்றது. பதினேழு வயது பாவை ஒருத்தி தனித்து நீராடுகிறுள் என்பதால் ஏற்பட்டதல்ல அந்த உவகை.

அக்காட்சியை அவன் அன்று மட்டும்தான் கண்டான் இல்லை. கடந்த ஆறு மாதங்களாக தினசரி கண்டு வரும் பழைய படம்தான் அது. ஆனுல் அவன் உவகைக்குக் காரணமாயிருந்தது கன்னியின் புனலாடு காட்சியல்ல. அவள் அவிழ்த்து கரையில் வைக்கப்பட்டுள்ள புடவையே ஆகும். புடவை என்ன அவ்வளவு அழகானதா? இல்லை சாதாரணமானதுதான். ஆனுல் புடவை அவ்விளைஞனுக்கு ஒரு பெரிய உபகாரத்தைச் செய்திருக்கிறது,பிரதியுபகாரத்தை எதிர்பார்க்காத மழையைப்போல. நிலைமையைப் புரிந்து கொண்டான் தம்பி. நெஞ்சில் உறுதி பிறக்கிறது. இன்று எவ்வளவு நேரமானுலும் சரி. இங்கேயே உட்கார்ந்து விடுவோம். இவள் எவ்வாறு கரையேறுவாள் பார்க்கலாம் என்று திடப்படுத்திக் கொள்ளுகிறுன் நெஞ்சில். அதுமட்டுமல்ல அவள் குளித்துக் கொண்டிருக்கும் திசையை நோக்கியே உட்கார்ந்தும் விடுகிறுன். இளையோனின் மனம் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது. இன்று எப்படியும் அவளோடு பேசிவிடவேண்டும் என்று எண்ணுகிறுன். எவ்விதம் பேச்சை ஆரம்பிப்பது! முதல் எடுப்பிலேயே வெட்டிப் பேசிவிட்டால்? இவ்வாறெல்லாம் அவன் வெள்ளையுள்ளம் கலங்குகிறது. அவன் கண்களோ அவளையே விழுங்கிக் கொண்டிருந்தன. மனமோ அவளைப்பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறது. தன்னையே மறந்தான். பலவாறாகச் சிதறிப்போய்க் கொண்டிருக்கும் தன் மாடுகளையும் மறந்தான்.

தனியாகக் குளித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் கண்கொட்டாமல் ஒரு இளைஞன் தன்னையே வேண்டுமென்றே கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட கன்னியின் மனதிலே கோபம் பிறக்கிறது. இளைஞனும் புதியவனல்ல தன் கோபத்தைக் கொட்டிவிட. தினசரி சோளக் கொல்லைக் காவல் முடிந்ததும் அச் சிற்றேடையில் குளிக்கும்போதெல்லாம் அவனைப் பார்ப்பதுண்டு. இன்றும் அப்படித்தான் என்று நினைத்தாள். ஏதோ மீசை முளைக்காத மாட்டுக்காரச் சிறுவன் என்று மட்டுமே அவனைப்பற்றி அவள் எண்ணியிருந்தாள். ஆனுல் இன்று அவன் செயல் புதுவிதமாக இருந்தபடியால் அவன்மீது ஒரு இனம் தெரியாத புதிய எண்ணம் உண்டாயிற்று அவள் நெஞ்சில். கூடவே நாணமும் கலந்து கொண்டது. கழுத்தளவு தண்ணீருக்குள் தன் மேனியை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு தன் கண்ணியத்தை-பொக்கிஷத்தை மறைத்துக் காத்து நின்றுள். ஒரு பெண் எவ்வளவு நேரம்தான் தண்ணீருக்குள் நிற்க முடியும். இளைஞனே தன்பார்வையை வேறு பக்கம் திருப்புவதாக இல்லை. அவன்தான் வைராக்கியத்திற்காகவே உட்கார்ந்துவிட்டவனுயிற்றே. அவளுக்கோ நீரை விட்டு வெளியே வரமுடியாத நிலை. இவனுக்கோ காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு. அவளுக்கோ கடிதில் இருட்டிவிடுமே என்ற கவலை. இவனுக்கோ ஏன் சூரியன் இன்னும் நின்று தொலைக்கிறுன் என்ற துடிப்பு. மேற்கு மலையுச்சி சூரியனை மறைத்துவிட்டது. ஆனுல் அதன் பரந்த ஒளி இன்னும் உலகெங்கும் வியாபித்து நின்றது. இப்படியே இருந்தால் இன்னும் சற்று நேரத்தில் இருள் சூழ்ந்து விடும். யுவதி தீர்மானித்தாள். நாம் எப்படியும் கரையேற வேண்டும். இந்தப் பிடிவாதக்காரப் பயலை இங்கிருந்து விரட்டவேண்டும். புதிய யுக்தி பிறக்கிறது. வெட்கம் விலகி நிற்கிறது சற்று. துணிவு எக்காளமிடுகிறது. துணிந்து கூறுகிறுள். என்னவென்று? இதோ...

மலையோரம் மாடு மேய்க்கும்
மாட்டாஞ் சிறு பயலே
நீமேய்க்கும் மாடு கெல்லாம்...
அடடடடா
மலைதாண்டிப் போகுத டா.

பாட்டிலே என்ன ஏளனம். பதினேழு பிராயத்து இளைஞன் ஒரு பயலாம். அதுவும் மாட்டுக்காரப்பயலாம். அதுவும் **அடா** வரிசையிலேயே கூறிவிட்டாள். அவமானம்-அவமானம்; 'இப்படிச் சொன்னுல்தான் அவனுக்கு ஆத்திரமும் ரோசமும் உண்டாகும்' என்று நினைத்துத்தான் அவ்வாறு சொன்னுளோ என்னவோ நாமறியோம்.

தான் கண்ணி வைத்த கிளி தன்னையே ஏமாற்றப் பார்க்கிறது. தான் 'ஆசை வைத்த குமரி தன்னையே கேலி செய்கிறுள். அதுவும் சாதாரணமாகவா? ஏளனமாகவல்லவா எடுத்தெறிந்து பேசிவிட்டாள். அதுவும் ஆண்மை பெற்றிருந்த சிறுவன் என்றல்லவா

— 11-ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 ‖ 21—9—57 ‖ இதழ் 12

பிரிவினை வாரம்

தனித்திருநா டேன்கேட்டோம்? கார ணத்தைத்
தரவாரி பிரித்துரைப்பேன்! பன்னா ருண்டு
தனித்திருந்து மொழி,கல்வி கலைக ளோடு
தரமான வாணிபமும் மிகப்ப டைத்தே
இனித்தசுவை வாழ்க்கைமுறை பலவுங் கண்ட
இயல்புமிகும் தமிழரெலாம் இனத்தால் ஒன்று
மனித்தகுணம் சிறிதுமிலா வடவர் நம்மில்
மாறுபடு இனத்தார்!கா ரணத்தில் ஒன்று

தொட்டகரம் பொன்னாகும்! மெல்ல மெல்லச்
சுவைத்தஇதழ் கனியாகும்! நெஞ்ச மன்றில்
பட்டவுடன் பொருளாகும்! வாழ்க்கை வண்ணம்
படைத்தசுவை நூல்களொரு கோடி யாகும்
கட்டுமலர்க் கொத்தேபோல் இனிமை தேக்கிக்
கரந்தமொழி தமிழாகும் நம்ம தாகும்!
கெட்டமொழி இந்திஅதன் பகை வனாகும்
கேட்கின்ற பிரிவினைக்குப் பொருள்இ ரண்டாம்

களவுநெறி வழுவாத பண்பு காட்டி
காலழகு பிழையாத முறையில் ஆக்கி
பற்பலவா றுடுகிற கலைகள் யாவும்
பகுத்தமுறை தமிழ்வாழ்க்கை முறையே யாகும்
சொற்பொருளைப் பாவத்தில் துலக்கிக் காட்டும்
தூயவழிக் கலையும்நம துடைமை யாகும்
அற்புதமாம் தமிழ்க்கலைக்கு வடவர் நாட்டின்
அசடுவழி கலைவேறு! கொள்க மூன்று

சிந்துநதிக் கரையோரம் அந்த நாளில்
சீப்புமுதல் பொருள்கள்பல செய்த மாந்தர்
தந்ததொரு நாகரிகம் எகிப்து நாட்டின்
சந்தையிலே சதுராடும்! அகில மெங்கும்
வந்தபொருள் தமிழ்மாந்தர் வளர்த்த செல்வம்!
வாணிபமும் கடல்மீறும் புதுமை யாவும்
தந்தவர்கள் நம்மவரே! நாக ரீகத்
தரத்தாலே நாம்வேறும் கொள்க நான்கு

விந்தியத்துக் கப்பாலே ஆட்சி வேறு!
வியந்ததமிழ் முறைவேறு! விளக்கங் கேளீர்!
சிந்தைவழி ஒன்றாகி எல்லை ஒன்றாய்
சேரர்முதல் மூவரிதை ஆண்டி ருந்தார்
'இந்திய'ரை வந்தோரே ஆண்டி ருந்தார்!
எல்லோர்க்கும் பொதுமகளாம் டில்லிக் கோட்டை!
சந்ததியால் பாழான தமிழர் நாட்டின்
சரித்திரத்தால் நாம்வேறும் கொள்கை ஐந்து!

இனத்தாலும் மொழியாலும் கலைக ளாலும்
இயல்புமிகும் நாகரிகத் துறையி னாலும்
தனித்ததொரு வரலாற்றுச் சான்றி னாலும்
தமிழ்மாந்தர் தனித்தோரே! தமிழர் நாடும்
தனித்தேதான் வாழ்வுபெறும்! ஆத லாற்றான்
"தமிழ்நாடு தமிழர்க்கே" என்கின் றோம்நாம்!
மனத்தேஓர் களங்கமிலாப் பெரியீர்! இந்த
வழிவருவீர்! தனிநாட்டைப் பிரித்து வாழ்வோம்!

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

"அவற்றுள்
ஏழாமுயி ரிய்யு
மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று
மவ்வம் முதலும்
எட்டே யவ்வும்
முப்பது சயவும்
மேலொன்று சடவும்
இரண்டு சதவும்
மூன்றே யகவு
மைந்திரு கவ்வும்
ஆவி யையு மியீ ரிகரமும்." (147)

"ரவ்விற் கம்முத
லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத
லிரண்டும் யவ்விற்
கியவு மொழிமுத
லாகிமுன் வருமே." (148)

"இணைந்தியல் காலை
யரலக் கிகரமும்
மல்வக் குகரமும்
நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி
யுவ்வு மாம்பிற." (149)

என வடசொற்கள் கட்டுமட்டும் கங்கு கரையுமின்றித் தமிழில் தாராளமாய் வந்து வழங்குமாறு வழிவகுத்துப் பாழ்படுத்தியது மன்றி, பல தென்சொற்களை வட சொற்களென மயங்கவும் வைத்தார்.

வடசொற்களால் தமிழ் வளம் பெற்றதெனக் கூறுவார், தம் அறியாமையும் ஆராய்ச்சி யின்மையையும் பகைமையையுமே வெளிப்படுத்துவர். வடமொழியால் தமிழடைந்த கேடு கொஞ்சநஞ்சமன்று. வடசொற்கள் வேண்டாது தமிழிற் புகுத்தப்பட்டன என்பதற்கு, ஊசி (உதீச்சி-வடக்கு) பாசி (ப்ராச்சீ-கிழக்கு) என்ற புறநானூற்றுச் சொற்களே (229-ஆம் பாட்டு) போதுமானவை. சொன் மறைவு, வழக்கு வீழ்ச்சி, ஒலிமாற்றம், பொருட்கேடு ஆகிய நால்வகையினும், வடசொல்லால் தமிழுக்கு நேர்ந்த தீங்கு வரம்பற்றதாம். நன்னூலார் செய்த வழுக்களுள் தலையானது வடமொழியாக்கமே.

3. பெயரியல்

தொல்காப்பியர்,

"எல்லாச் சொல்லும்
பொருள்குறித் தனவே." (640)

"மொழிப்பொருட் காரணம்
விழிப்பத் தோன்றா." (877)

எனக் கூறியிருப்பவும்,

நன்னூலார்,

"இடுகுறி காரணப்
பெயர்பொதுச் சிறப்பின." (62)

"இடுகுறி காரண
மரபோ டாக்கம்
....
....
ஏற்பவும் பொதுவு
மாவன பெயரே." (275)

என வடநூற் கொள்கை தழுவி, தமிழிலும் இடுகுறி யுண்டென உண்மைக்கு மாறாகக் கூறினர்.

உரையாசிரியர் இடுகுறிக் கெடுத்துக்காட்டாகக் கூறுவன வெல்லாம், மரம், பனை, பலா, பரம், பொன், விள என்பவையே. இவையும் காரணக் குறியே என்பதைக் கீழ்வரும் மொழிப் பொருட் காரணத்தாலும் பொருள் விளக்கத்தாலும் கண்டுகொள்க.

மரத்தல்-உணர்ச்சியறுதல், மரம்-உணர்ச்சியற்றது. பல்-பன்-பனை. பல்-ஒரு கூரிய உறுப்பு, கூர்மை. பன்-அரிவாட்பல். பனை-பற்போல் கூறிய கருக்கு மட்டையுடைய மரம்.

பல்-பரு-பெரு. பல்-பலா-பெரும் பழம் பெரும் பழத்தையுடைய மரம்.

புரம்-உயரம், உயரமானது,மேன் மாடம். "புரை உயர்வாகும்." (தொல். 785.) புரம்-பரம்-மேல், மேலிடம், வானுலகம். உ-அ. ஒப்பு நோக்க: குடும்பு-கடும்பு, முடங்கு-மடங்கு.

பொல்-பொன் - அழகு, அழகிய தாது (உலோகம்). பொல் - பு - பொற்பு-அழகு. பொற்ற - அழகிய (சிந்தாமணி, 885). பொற்றது - பொலிவுற்றது (சிந். 2247). விள்-விள - வெள்ளையான தோட்டையுடைய பழம், அதனையுடைய மரம். விள்-வெள்-வெள்ளை.

முடிபு

தொல்காப்பியத்திற்கும் நன்னூற்கும் பொதுவான பல வழுக்களிருப்பினும், அவற்றை நீக்கி, நன்னூற்குச் சிறப்பானவையே ஈங்குக் கூறப்பட்டன. இதுகாறும் கூறியவற்றால், நன்னூல் சில காரணம் பற்றி நன்னூலாயினும், பல காரணம் பற்றி நன்னூலன்று என்பதே முடிபாகக் கொள்க.

அடுத்த இதழில்
'நான் எழுத்தாளன் ஆனேன்'
வரும்

மாவட்டத் தொடர்பு மாற்றம்

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் இதுவரை இயங்கிவந்த கீழ்க்கண்ட ஆறு கிளைக் கழகங்கள், சென்னை-செங்கற்பட்டு மாவட்ட தி.மு. கழகங்களின் நிர்வாகிகள் உடன்பாட்டோடும், சம்பந்தப்பட்ட கிளைக் கழகங்களுக்கு முன்னரே அறிவித்துள்ளபடியும், இன்று-17—9—57ம் நாள் முதல் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்புக்கு மாற்றப்படுகின்றன. இன்று முதற்கொண்டு கீழ்க்கண்ட ஆறு கிளைகளும் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்திற்கு உட்பட்ட கிளைகளாகப் பணியாற்றும்.

மாற்றப்படும் கிளைகள் :—

திருவொற்றியூர் தி.மு.க. கிளை
புழல் ,,
மாதவரம் ,,
கொடுங்கையூர் ,,
செங்குன்றம் ,,
ஆலந்தூர் ,,

—தலைமைக் கழகம், (தி. மு. க.)

அன்பு

முகில் மோதிச் சிதறி விடுமோ எனஐயுறும் அளவுக்கு உயர்ந்த மாளிகை! அதன் உச்சி மாடியில் ஒரு பூங்காவையே உருவாக்கியிருந்தார் அந்த இல்லத்தின் உரிமையாளர். அந்த வான்முட்டும் மாளிகையின் மாடியில் நின்று கொண்டு தேன் சொட்டும்... கீதமிசைத்துக் கொண்டிருந்தாள் ஒரு நங்கை. அவள் இடையிடையே விடும் பெருமூச்சு அவள் பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. பாடுவதை நிறுத்தி விட்டு வான வீதியிலே பவனி வரும் முழு மதியின் எழிலை மாடியிலே நிற்கும் இந்த அழகு நிலா தன் கயல் விழிகளால் தழுவியபடி ரசித்துக்கொண்டிருந்தது.

"வானத்திலே அப்படி என்னடி அதிசயம் தோன்றிவிட்டது? இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டே நிற்கிருய்?" என்று குரல் கொடுத்துக் கொண்டே, அவள் தோழி அங்கு வந்து சேர்ந்தாள்.

"விண்ணிலே அதிசயம் தானடி தோன்றியிருக்கிறது. அதோபார் வெண்ணிலாவைச் சுற்றி கோட்டை கட்டியிருப்பதை!" என்ருள் இவள்.

',இதென்னடி அதிசயம்! அது இயற்கையாக ஏற்படுவது தானே!"

"அந்த இயற்கைக்காட்சி அவரை நினைவூட்டுகிறதடி!"

"எவரை?"

"அவரைத்தானடி!" என் இன்ப வாழ்விற்காக, என் பொருட்டு திரை கடலோடித் திரவியம் கொண்டு வரப் போயிருக்கிருரே அவரை! ஏண்டி, என் உள்ளமென்னும் கோட்டைக்குள் அவர் உருவம் அந்த முழுமதியைப் போல் தானே இருக்கும்?"

"சரிதான், நல்ல ஆராய்ச்சி! வா போகலாம்!"

அதோ பாரடி அந்த முகிற் கூட்டம் முழுமதியைத் தழுவிக் கொண்டே தவழும் காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது! இப்படித்தானடி என் உள்ளத்திலே குடியிருக்கும் அவரை, என் ஆசை நினைவுகள் தழுவிக் கொண்டே இருக்கின்றன."

"சரி சரி நேரமாகிவிட்டது! வா போகலாம்."

"இன்னும் நேரமாகவில்லையடி! அதோ பார், காவிரிக்கரையின் ஓரத்திலே காதலர்கள். காயும் நிலவின்பக்கத்திலே தாரகைகள். முகில் கண்டுஆடும் மயில்கள்..."

"ஆமாம்! உன்னைப்போல் இப்படித் தூங்காமல் விழித்துக் கொண்டே கூச்சல் போட்டுக் கொண்டிருக்கும் கோட்டான்கள்! இதையும் சொல்ல மறந்துவிட்டாயே! பால் கொண்டு வந்து வைத்து எவ்வளவு நேரமாகிறது; இன்னும் பருகவில்லை?"

"நன்ருக ஆறட்டுமடி."

"சூடு குறைந்துவிட்டால் சுவை கெட்டுவிடுமடி.

"சூட்டோடு குடித்தால்...!"

"சூடோடு குடித்தால்?"

"ஏண்டி, அவர்தான் என் உள்ளத்திலே இருக்கிருர் என்றேனே! பாலைச் சூட்டோடு பருகினுல் என் சுந்தரனைச் சுட்டு விடாது?"

"பின் சூடு குறைந்துவிட்டால் சுவை குன்றிவிடாது?

"அவர் பேசும் இனிமையான வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நினைத்துக்கொண்டே பாலைப் பருகினுல் அமிர்தமாக இருக்குமடி, அமிர்தமாக இருக்கும்!"

★

தலைவன் பொருளிட்டும் பொருட்டு வேறுநாடு சென்றுவிட்டாலும், அவன்,தன் உள்ளத்தில் இருப்பதாகவே தலைவி நினைத்துக்கொள்ளுகிருள். அதற்காகவே அவள் சூடான பொருள் எதையுமே அருந்துவதில்லையாம். தலைவி தன் தலைவன்மேல் வைத்திருக்கும் அன்பை மற்றபுலவர்கள் இரு நூறு வரிகளில் வர்ணிப்பதை **வள்ளுவர்** இரண்டே வரிகளில் எவ்வளவு நயத்தோடு அழகாகக் கூறுகிருர் பாருங்கள்.

"நெஞ்சத்தார் காத லவராக
வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு
அறிந்து"

-தினகரன்.

பன்னீர்செல்வம் படிப்பகம்

15-9-'57 ஞாயிறு பிற்பகல், சென்னை ஆயிரம்விளக்கு பன்னீர் செல்வம் படிப்பகத்தின் சார்பில் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் நினைவுநாள் நடைபெற்றது. தோழர்கள் எஸ் எஸ். தென்னரசு, 'முரசொலி' சொர்ணம் ஆகியோர் முன்னிலையில் நூற்றுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு இலவச உணவு வழங்கப்பட்டது என எம். ராஜசேகர் அறிவிக்கிருர்.

மரமும் வேரும்

உருவகம்

மரத்தினுடைய அடிவேருக்கு புதுமையான எண்ணம் ஏற்பட்டது. தானும் ஒருமுறையாவது பூமித்தாயின் அணைப்பைவிட்டு மேலே வந்து, உலகம் எப்படி இருக்கிறது என்பதை காணவேண்டும் என்பதுதான் அந்த எண்ணம்.

அதனுடைய கற்பனையில், உலகம்...கற்பனைக்கே எட்டாத புதுமையாகத் தென்பட்டது. அந்த ஆவல், அடக்க முடியாத பெரும் ஆசை...! மரத்தைப் பார்த்தே கேட்டுவிட்டது; "நானும் உலகத்தைக் காண விரும்புகிறேன்" என்று. எனினும் உள்ளத்திலே நடுக்கம்தான். நீர்நிறைந்துவிட்டதற்கு மேலும், நீர் வரும்பொழுது அணை என்னசெய்யும்? ஆவலாகிய பெருநீருக்குமுன் அடிமை எண்ணமாகிய அணையும்.

மரமோ, வேரைப் பார்த்துச் சிரித்தபடியே, "என்ன ஆசையப்பா உனக்கு, ஆகாத காரியத்திற்கு இப்படியெல்லாம் ஆசைப்படலாமா? உன்னுல் உலகைக் காணமுடியுமா? அப்படித்தான் வெளியுலகில் வந்து தலைநீட்டினுல் உன்னைப் பற்றிக் கவலைப்படுவார் யார்? கவனிப்பார் யார்? என்னைப் பார்...! இலை, பூ, காய், கனிகளோடு கப்பும் கிளையுமாக எவ்வளவு அழகாக இருக்கிறேன். என்னை நாடி எத்தனை எத்தனை பேர்கள் வருகிருர்கள். அவர்களுக்கெல்லாம் நான் இதம் தருகிறேன், இனிமை தருகிறேன், உன்னுல் இதெல்லாம் முடியுமா? உன்னை யார் விரும்புவார்கள்? வீணுக வெளி உலகைக் காண ஆசைப்பட்டு வெம்பிச் சாகாதே, நீ என்றும் உள்ளேயே இரு. அதுதான் உன் தொழில். அதுதான் ஆண்டவன் உனக்கு இட்ட அமைப்பு, விதியாகும். இனி அத்தகாத எண்ணத்தையெல்லாம் கனவிலும் கருதாதே" என்று சிறு 'பிரசங்கமே' செய்துவிட்டது.

வேருக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனத்திரையில் எழுதப்பட்ட ஆசையாகிய அழகு ஓவியத்தையோ அழிக்கக்கூடவில்லை. மேலும், மேலும் எண்ணங்கள் வளர்ந்தபடியே இருந்தன. "எப்படியாவது வெளி உலகைக் காணவேண்டும்" இப்படியே அதன் வாய் முணுமுணுத்தபடி இருந்தது.

இந்நிலையில் ஒரு நாள் யாரோ அதன் முதுகைத்தட்டினுர்கள். "இந்தத்துர்பாக்கியசாலியை இதமாகத்தட்டிக் கொடுப்பவர் யார்?" என்று எண்ணியபடியே திரும்பிப் பார்த்தது. பூமித்தாய் தன் இரும்புப்பிடியை விட்டு மெல்ல முகில்த்தபடியே "நண்பா, என் பிடியை நான் விட்டு விட்டேன், உன் பிடியை நீயும் விட்டு வெளியுலகம் காணப்போ" என்றது.

வேருக்கோ ஆச்சரிய அலைகள் மோதின. "என்னுலும் அது முடியுமா? நானும் வெளியுலகைக்காணக் கூடுமா? என்று கூக்குரலிட்டே விட்டது அதன் வாய்.

"ஆம், உன்னுலும் முடியும். நீயும் வெளியுலகைக் காணலாம். எங்கே சிறு முயற்சி செய்." என்றபடி மேலும் தட்டிக்கொடுத்து தன் பிடியை முழுவதும் விட்டுக் கொடுத்தது.

அதே நேரத்தில் வேரும் தன் பிடியை விட்டு முயற்சித்தது. மறுகணம் மரம் அடியோடு சாய்ந்தது. அடிவேர் வெளி உலகைப்பார்த்துக்களித்தது. களிப்பு மறைவதற்குள் அதன் மனத்தளத்தில் மரம் சொன்ன, "உன்னைப் பற்றி உலகில் கவலைப்படுவார் யார்?" என்ற கேள்வி எழுந்தது.

வேரின் முகம் சுண்டியது, "ஆம், அதுவும் உண்மை தான்" என்று எண்ணியது.

அதே நேரத்தில் மரம் வீழ்ந்து கிடந்த சாலைவழியே சென்ற ஒருவன், "ஆகா, அருமையான மூலிகை இந்த மரத்தின் வேர், இதை எவ்வளவு நாளாகத்தேடினேன், இன்று பெற்றேன். இதைக்கொண்டு எவ்வளவோ நோய்களைத்தீர்ப்பேன். வாழிய வேரே! வாழிய! இவ்வையத்திற்கு மாமருந்தாய் வந்த மூலிகையே" என்ருன்.

வேர், மரத்தைப்பெருமையுடன் பார்த்தது. அந்தப் பார்வையில் இருந்த கேள்விக்குறிக்கு விடை சொல்ல மரத்தால் கூடுமா?.........

அதன் இலைகள்தான் எவ்வளவோ நேரத்திற்கு முன்பே வாடிவிட்டனவே.........!

கரந்தை-கணேசன்.

"சாரந்தா, ஏன் கொஞ்சநாட்களாகத் தெளிவில்லாமலேயே இருக்கிறாய்? புந்தேலியர் காலத்தில் கீர்த்தியுள்ள ஒரு தலைமுறையை உருவாக்கிவிட்டதாக நான் இறுமாப்போடு இருக்கிறேன். நீயோ முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறாய்!"

"அப்படி ஒன்றும் இல்லை பிரபு! உங்களுடைய புகழையும் செல்வாக்கையும் எண்ணி எண்ணிப் பூரிக்கிறேன். அடுத்து வரும் புந்தேலியச் சிற்றரசுகளுக்கு நம்முடைய காலம் புரட்சி இலக்கியமாகிவிட்டது என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன். எனக்கென்ன கவலை?"

ராணி சாரந்தாவின் அடக்கம் நிறைந்த பேச்சைக் கேட்டு சம்பத்ராய் சிரித்தான். அவனும் அடக்கத்துடனே சிரித்தான். அந்தச் சிரிப்பிலே பொருள் இருந்தது.

"சாரந்தா, எதையோ என்னிடம் மறைக்கிறாய்? உன்னுடைய கோபம் என்னுடைய மகிழ்ச்சியைக் குறைக்குமானால், அது புந்தேலிய சமுதாயத்திற்கே ஆபத்து. சொல்லு! கண்ணீர் என்றாலே எனக்குப் பயமாக இருக்கிறது. கண்ணீரிலே வளர்ந்த கனிமரத்தின் விதை தான் இன்றைய புந்தேலிய வெற்றி. நீ ஓரிசாவில் இருந்தபோது மகிழ்ச்சியாக இருந்தாய். புன்னகையோடு பீடாக் கொடுத்தாய். ஆயுதங்களை அணிவித்து அழகு பார்த்தாய். டில்லிக்கு வந்த பிறகு... உன்னைச் சிரித்த முகத்துடன் ஒருமுறைகூடப் பார்க்கவில்லை."

"உண்மைதான். ஓரிசாவில் நான் ஒரு அரசருக்குப் பட்டத்து ராணியாக இருந்தேன். அயோத்திக் கோசலைபோல் வாழ்ந்தேன். ஆனால் இங்கே நான் ஒரு ஜாகீர்தாரின் வேலைக்காரியைப்போல், பாதுஷாவின் ஒரு சேவகருக்கு மனைவியைப்போல் வாழ்கிறேன். நீங்கள் டில்லிப் பாதுஷாவிற்குப் பணிந்து நடப்பதை நான் துளியும் விரும்பவில்லை பிரபு!"- சாரந்தா உருக்கமாகப் பேசினாள். அந்தத் தொனி, கானகத்தில் கட்டில்லாமல் பறந்து திரியும் கௌதாரியின் கொக்கரிப்பாக இருந்தது.

அது நாள்வரை டில்லியைப் புனித நகரமாக மதித்து வந்த சம்பத்ராய் அன்றிலிருந்து டில்லியை வெறுக்க ஆரம்பித்தான்.

சம்பத்ராயும், சாரந்தாவும் ஓரிசா திரும்பினார்கள். இழந்த உடைவாளைப் பெற்ற போர் வீரனைப்போல், புந்தேல் கண்ட் பெருமிதம் கொண்டது. ஆனால் அந்த மகிழ்ச்சி எத்தனை நாள் நிலைத்தது?

டில்லியை விட்டுத் திரும்பி ஒருகிழமைகூடச் செல்லவில்லை. சம்பத்ராயின் செல்வன் சந்திரசாலை, வலீ பகதூர் கானின் கையாட்கள் மடக்கி குதிரையைப் பிடித்துப் போய்விட்டதாகச் செய்தி கிடைத்தது. சாரந்தா துடித்தாள். குதிரை போனதைப் பற்றிக்கூட அவளுக்குக் கவலையில்லை. குதிரையையும் இழந்துவிட்டு தன்மகன் தோற்றுப்போய் வந்ததுதான் அவளை வாட்டியது. ஆனால் சம்பத்ராய் இதை மிகச் சாதாரணமாக எண்ணிவிட்டான். சிரித்தான். கள் குடித்தவனைப் போல் தலையை ஆட்டினான்.

பகதூர்கான் பேர் பெற்ற சேனாதிபதி. ஆலம்கிரின் வலக்கரம் போன்றவன். அத்தகைய செல்வாக்குப் பெற்றவன் ஒருமுறை சம்பத்ராயிடம் தோற்றுப் போய்விட்டான். அந்தக்களத்திலே கிடைத்த ஈராக் குதிரையைத்தான் மறுபடியும் அவன் அபகரித்துக்கொண்டான்.

ஆலம்கிரின் சபை கூடியிருந்தது. பகதூர்கான் ஆலம்கிரின் அருகில் கம்பீரமாக அமர்ந்திருந்தான். சாரந்தா நுழைந்தாள்.

"கான் சாகிப்! சம்பல் நதிக் கரையிலே காட்ட வேண்டிய வீரத்தை, இன்று ஒரு பாலகனிடம் காட்டி விட்டீர்கள்! முறைதானா இது?" என்று கேட்டாள் சாரந்தா.

பகதூர்கான் கண்கள் அக்கினி ஒளியைக் கக்கின. "என் பொருளை நான் மீட்டிக்கொண்டேன். இதற்கு நான் ஏன் தயங்க வேண்டும்?"

"அது உங்கள் பொருளல்ல; நான் அதைப் போர்க்களத்திலே பெற்றேன். போர்க்களத்திலே பெற்ற பொருள், கைப்பற்றியவர்களுக்குச் சொந்தமென்ற சாதாரணப்போர் நீதியைக்கூட நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்களென்று நான் நினைக்கவில்லை!" என்றாள் சாரந்தா.

"அந்தக்குதிரையையும் நான் ஒரு போதும் தரமாட்டேன். பதிலாக என் லாயம் முழுவதையும் வேண்டுமானாலும் தருகிறேன்."

"எனக்கு அந்தக் குதிரைதான் தேவை! உலகத்தைக் கொடுத்தாலும் எனக்கு இப்போது தூசு!"

அதுவரை ஊமையாக இருந்த ஆலம்கிர் இப்போது குறுக்கிட்டான்.

"ராணி, குதிரை உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் அதற்கு நிறையப் பொருள்தர வேண்டியதாகுமே" என்றான்.

"அந்தக் குதிரையைப் பெற நான் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன்." என்றாள் அவள்.

"ஜாகிரைக்கூடவா?"—கேட்டான் ஆலம்கிர்.

"ஜாகீர் எனக்கு அற்பம்!" என்றாள் சாரந்தா.

"ராஜ்யம்?"

"தொலைந்தாலென்ன?"

"ஒரு குதிரைக்காகவா?"

"குதிரைக்காக அல்ல; விலையுயர்ந்த ஒரு பொருளுக்காக!" என்றாள் ராணி.

"அது என்ன பொருள்?"

"மானம்!"—என்று அழுத்திக் கூறினாள் சாரந்தா.

புரவி போரைத் தொடக்கி வைத்தது. புந்தேல் கண்ட் போர்க்கோலம் பூண்டது.

ஆலம்கிரின் படை மிகுந்த வேகத்தோடு போர் புரிந்து ஓரிசா கோட்டையை அவர்கள் முற்றுகையிட்டு விட்டார்கள்.

சம்பத்ராயும் பிரஜைகளுக்காகப் பின்வாங்கவிரும்பவில்லை.

"அந்த எதிரியும் நமது மக்களை எத்துன்பத்திலும் ஆழ்த்தமாட்டார்கள் என்ற நம்பிக்கை இருந்தால் நீங்கள் கோட்டையை விட்டு வருவதில் தடையில்லையல்லவா!" என்றாள் சாரந்தா.

"அப்படிப்பட்ட நம்பிக்கையை யார் தரப்போகிறார்கள்?"

"ஆலம்கிரின் சேனைத் தலைவன்!"

"அப்படியிருந்தால் எனக்குத் தடையில்லை!"

சாரந்தாவின் முகத்திலே அமைதி குடியேறியது.

★

இரண்டு நாட்களுக்குப்பிறகு சாரந்தா, சம்பத்ராயின் அருகில் வந்தாள்.

"என்ன சாரந்தா, ஏற்பாடு செய்தாயா?"

"முடித்துவிட்டேன்!"

"அதற்கு என்ன செலவாயிற்று! சொல் சாரந்தா!"

"பணச்செலவில்லை! ஆனால் ....?"

"ஆனால் என்ன?"

"சந்திரசாலை கொடுத்து விட்டேன்" என்றாள்.

"சந்திரசாலையா? கேட்டிக்கார மைந்தனையா அந்த அரக்கர்களிடம் அனுப்பி வைத்தாய்! கொன்றுவிடுவார்களே!"

"இல்லை! செய்திதானே அனுப்பினேன். அவர்களுக்கு நீதி தெரியாதா என்ன! இதோ பதில் முடங்கல் வந்திருக்கிறது, குடிகளைத் துன்புறுத்தமாட்டோம் என்று." என்றாள்.

சம்பத்ராய் கட்டிலை விட்டு எழுந்தான். புறப்படுவதற்கு ஆயத்தம் நடைபெற்றது. கண்ணீர் ததும்பத் தள்ளாடித் தள்ளாடி பல்லக்கில் ஏறினான் சம்பத்ராய். முக்காடிட்ட வண்ணம் பக்கத்திலே அமர்ந்தாள் சாரந்தா.

பல்லக்கு காட்டுக்குள் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று, வேகமாக ஒரு குதிரை வீரன் வந்து பல்லக்கை மறித்தான். பல்லக்குத் தூக்கிகள் பதறிப் போனார்கள்.

சந்திரசாலைக் கொன்றுவிட்டார்கள் எதிரிகள்; பல்லக்கைத் துரத்திக்கொண்டு ஒரு எதிரிப் படை வருவதாகச் சொன்னான் அந்த வீரன். அவனும் புந்தேலியன்தான்.

சாரந்தா திடுக்கிட்டாள். திரையை விலக்கிக்கொண்டு பார்த்தாள். பெரும்படை ஒன்று வந்துகொண்டிருந்தது.

சம்பத்ராய்க்கு உடல் நிலை மிக மோசமாக இருந்தது. அவனால் பேசக்கூட முடியவில்லை. இருமினான். அதற்குள் படை நெருங்கிவிட்டது.

"சாரந்தா! சாரந்தா! கடைசிக் காலத்தில் நான் பகைவனிடம் சிக்கிக்கொண்டேனே! டில்லித் தெருக்களிலே என்னை விலங்கிட்டு இழுத்துப்போகப் போகிறார்களே சாரந்தா!" என்று கதறினான் சம்பத்ராய்.

படை பல்லக்கை மறித்துவிட்டது. பெரும்போர் நிகழ்ந்தது. பகதூர்கான் பல்லக்கின் திரையை நீக்கினான். சம்பத்ராய் பிணமாகக் கிடந்தான். சாரந்தா செத்துக்கொண்டிருந்தாள். அப்போதுதான் அவளது விழிகள் சோர்வுற்றன.

கடைசிவரை கணவனை எதிரிகளிடம் ஒப்படைத்துவிடக்கூடாது என்பதற்காக, சாரந்தா கணவனையே கத்தியால் கொன்றுவிட்டுத் தானும் இறந்த சம்பவங்களை சரித்திரம் இன்னும் மறக்கவில்லை.

கொலை சட்டத்திற்கு விரோதமானது என்றாலும், அதில் பெருமை தரக்கூடிய கொலையும் இருக்கத்தான் செய்கிறது. ★

நன்னூல் நன்னூலா?

பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.

பவணந்தியார் தம் நூலிற்கு நன்னூல் எனப் பெயரிட்டிருப்பினும், சுவாமிநாத தேசிகர் அந்நூலைப் பற்றி, "முன்னூலொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கெந்நூலாரு மிணையோ வென்னுந் துணிவே மன்னுக" வெனக் கூறியிருப்பினும், தொல்காப்பியம் முதலிய நிறையிலக்கண நூலொடு ஒப்பு நோக்கியும் மொழி நூற்குப் பொருந்தவும் காணுங்கால், அது பெரும்பாலும் நன்னூலன்று என்பதே பெறப்படும்.

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் என முப்பாற்றுதலின், எழுத்தும் சொல்லும் மட்டும் கூறும் இலக்கண நூல்கள் எத்துணை விரிவுபட்டன வாயினும், நிறைவுடையனவாகா. ஒரு காலத்தொரு பாண்டியன், "என்னே? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" எனக்கவன்றதாக இறையனரகப் பொருளுரை கூறுதல் காண்க.

பண்டைத்தமிழ் நூல்களெல்லாம் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டமையானும், இருவகை யுரைகளும் செய்யுளில் அடக்கப்பட்டமையானும் தமிழிலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பகுப்பதே பண்டை மரபாம்.

நன்னூல், நூற்பாவும் இயலும் அதிகாரமும் ஆகிய மூன்றுறுப்பு மடக்கிய பிண்டமேனும், தலையான பொருளதிகாரம் இல்லாமையின் முண்டமே யென்க. அதோடு பல இலக்கணங்களில் வழுவியுமுள்ளமை அதன் குறைபாட்டை மிகுத்துக் காட்டுவதாகும்.

நன்னூல் வழிஇயுள்ள இடங்களிற் சில வருமாறு :—

1. எழுத்தியல்

1. சார்பெழுத்து வகை

தொல்காப்பியர்,

"சார்ந்துவரல் மரபின்
மூன்றலங் கடையே" (1)

எனச் சார்பெழுத்தின் தொகையும்,

"அவைதாம்,
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும்
எழுத்தோரன்ன" (2)

என அதன் வகையும், உண்மைக்கொப்பவும் உத்தியொடு பொருந்தவும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பவும்,

நன்னூலார்,

"உயிர்மெய் யாய்தம்
உயிரள போற்றள
பஃகிய இஉ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ்
சார்பெழுத் தாகும்." (60)

என அதன் வகையைப் பெருக்கி,

"உயிர்மெய் யிரட்டுநூற்
றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு
மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறு றைகான் மூன்றே
ஔகான் ஒன்றே
மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு
சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற்
றெழுபா னென்ப." (61)

என அவ்வகைகளின் தொகையை விரித்து, விழுமிய பயனின்றி மாணவர்க்கு வீணுக வெறுப்பை விளைத்துள்ளார். அவற்றை இக்காலத்துப் பொதுக்கல்வி மாணவர்க்கும் பாடமாக விதித்து அவரை வருத்துவது மேலும் வருந்தத் தக்க செய்தியாகும்.

இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன இடத்தில் குறுகியொலிக்கும் என, மாத்திரை குறிக்குமிடத்தும் புணரியலிலும் கூறினுற் போதுமானதாம். அஃதன்றி, குறுகியொலிக்கு மிடமெல்லாம் வெவ்வேறெழுத்தெனக் கூறுவது, பிள்ளைத் தன்மையேயன்றிப் புலமைத் தன்மையாகாது.

2. ஆய்தப் பிறப்பு

தொல்காப்பியர்,

"சார்ந்துவரி னல்லது
தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை
மூன்றும்
தத்தம் சார்பிற்
பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற்
றம்மியல் பியலும்." (101)

என்று, சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களைச் சார்ந்து பிறப்பதைக் கூறியிருப்பவும்,

நன்னூலார்,

"ஆய்தக் கிடந்தலை
அங்கா முயற்சி." (87)

எனப்புதுவது புணர்த்தலாக விதித்துள்ளார்.

ககர வொலியை யொட்டிய ஆய்தம் தலையை இடமாகக் கொண்டு பிறக்குமென்றும் மெய்த்தன்மையுடைய அது அங்காத்தலால் தோன்றுமென்றும், அவர் எங்ஙனம் அறிந்தனரோ அறிகிலம். ஒரு கால், தொல்காப்பியர்க்கு முந்தியவராயோ தூய தமிழராயோ இருந்திருப்பின், அவர் கூற்றைக் கொள்ள ஒரு சிறிது இடமுண்டு. அவர் ஆரியச் சார்பான பிராமணராதலாலும் 12-ஆம் நூற்றாண்டினராதலாலும், தமிழிலக்கண விலக்கியங்களைக் கற்று இலக்கியவதிகாரியாயினரேயன்றி, தமிழ்மொழிக்கும் ஒலிக்கும் அதிகாரியாயினரல்லர் என அறிக.

3. மொழிமுத லெழுத்துக்கள்

"ஆவோ டல்லது
யகர முதலாது." (65)

என்றார் தொல்காப்பியர். இவ்வியல்பையே கழக (சங்க) இலக்கியத்திற் காண்கின்றோம். ஆயின், இதற்கு மாறாக,

"அஆ உஊ ஒஓ ஔ யம்முதல்" (104)

என விதித்துள்ளார் நன்னூலார். இதற்குக் காரணம், அவர் வட சொற்கட்குத் தமிழில் தாராளமாய் வழிவகுத்துள்ளதே.

தொல்காப்பியர் ஙகரத்தை மொழி முதலெழுத்தாகக் கொண்டிலர். ஆயின், நன்னூலார்,

"சுட்டியா வெகர
வினவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே." (106)

என நூற்பா யாத்தார்.

ஙகரம் இற்றைத் தமிழ்நாட்டில் மட்டுமன்றி, மூக்கொலிமிக்குள்ள மலையாள நாட்டிலும் ஒருவகை வழக்கிலும் வழங்குவதில்லை. ஙனம் என்னும் வடிவம் அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் எனச்சுட்டெழுத்தையும் வினவெழுத்தையும் ஒட்டியல்லது தனித்து வருவதில்லை. 'அவ்வகை' 'எவ்வகை' என்பன 'அந்தவகை' 'எந்தவகை' என்றும், 'அவ்வண்ணம்' 'எவ்வண்ணம்' என்பன 'அந்தவண்ணம்' 'எந்தவண்ணம்' என்றும், வழங்குவதுபோல் 'அங்ஙனம்', 'எங்ஙனம்,' என்பன 'அந்த ஙனம்' 'எந்த ஙனம்' என்று வழங்குவதை ஓரிடத்தும் காண்கின்றிலம். ஆகவே, ஙனம் என்னும் வடிவின் முதலெழுத்து மற்றோரெழுத்தின் திரிபாயே யிருத்தல் வேண்டும்.

ஆங்கு ஈங்கு என்னும் சுட்டுச் சொற்களும், எங்கு யாங்கு என்னும் வினச் சொற்களும், 'அனம்' என்னும் ஈற்றை யேற்று வருவது இயல்பு. அவ்வீறேற்ற அச்சொற்களே குறுகியும் குறுகாதும் நின்று மூக்கொலிப்பாடு **Nasalization** பெறுங்கால், அவற்றிடையேயுள்ள ககரம் ஙகரமாகத்திரியும்.

எ. டு. ஆங்கனம்-ஆங்ஙனம்
ஈங்கனம்-ஈங்ஙனம்
எங்கனம்-எங்ஙனம்
யாங்கனம்-யாங்ஙனம்
அங்கனம்-அங்ஙனம்
இங்கனம்-இங்ஙனம்

இக்காலத்து மொழியாராய்ச்சியும் ஒலியாராய்ச்சியும் அக்காலத்தில்லாமையும், நன்னூலார் வழுவியதற்குக் காரணமாகும்.

இனி, சுட்டையும் வினவையும் ஒட்டி ஙகரமும் மொழி முதலாகும் என்று நன்னூலார் கூறியது சரியே என்று வலிப்பார் உளரெனின்; அந்த வண்ணம், இந்த வண்ணம், எந்தவண்ணம் என்பன, முறையே, அன்னணம், இன்னணம், என்னணம் எனத் தொக்கும் திரிந்தும் வருமாதலின்,

"சுட்டுட னெகர
வினவழி யவ்வை
ஒட்டி னவ்வு முதலா கும்மே.

எனவும் விதித்தல் வேண்டும் எனக் கூறிவிடுக்க.

2. பதவியல்

1. பண்புப்பெயர்

"செம்மை சிறுமை
சேய்மை தீமை
வெம்மை புதுமை
மென்மை மேன்மை
திண்மை யுண்மை
நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற்
பகாநிலைப் பதமே." (135)

என்னும் நூற்பாவால், பண்புப் பெயர்களெல்லாம் மையீறு பெற்றே நிற்கும் என்பது படவும், பண்புப் பகுதியின் திரிபுகளைக் கூறும் நூற்பாவில் (136) 'ஈறுபோதல்' என்னுந் தொடரால், பண்புத் தொகைச் சொற்களிலுள்ள நிலைமொழியெல்லாம் ஈறுகெட்டவையே யென்றும் குறிப்பாய்க் கூறியுள்ளார் நன்னூலார்.

அன்பு, அழகு, சினம், பச்சை முதலிய பண்புப் பெயர்கள் பிறவீறும் பெற்றுவருவதால், பண்புப் பெயரீறு மையொன்றே யென்பது குன்றக் கூறலாம்.

செம்மை சிறுமை முதலிய மையீற்றுப் பண்புப் பெயர்களெல்லாம், சொல்நிலையாற் பகுசொல்லாயினும் பொருள் நிலையாற் பகாச்சொல்லாம் என்பது அறிவித்தற்குப் 'பண்பிற்பகா' என்று ஆசிரியர் கூறியதாக உரையாசிரியர் சிலர் கூறுவர். மையீற்றுப் பண்புப் பெயர்கள் சொல்நிலையால் மட்டுமன்றிப் பொருள்நிலையாலும் பகுசொல்லே யென்பது, நுணுகி நோக்குவார்க்குப் புலனும். மையீறு தன்மை குறிக்குஞ் சொல்லாதலின், மையீற்றுப் பண்புப் பெயர்களெல்லாம் பண்பும் பண்புத் தன்மையுமாகிய இருகருத்துக்களை யுணர்த்தும் பகுசொல்லே யென வறிக. ஒன்று என்பது ஓர் எண்ணையும், ஒருமை என்பது ஒன்றுயிருக்குந் தன்மையையும் உணர்த்தும். இங்ஙனமே பச்சை என்பது ஒரு நிறத்தையும், பசுமை என்பது பச்சையாயிருக்குந் தன்மையையும் உணர்த்தும்.

மேலும், செந்தமிழ், சிறுநாவல் முதலிய பண்புத் தொகைச் சொற்களின் நிலைமொழிகள் செம், சிறு என இயல்பாக நின்றவையேயன்றி, செம்மை, சிறுமை முதலியன ஈறுகெட்டு நின்றனவல்ல. சிறு, புது, மேல் முதலிய பண்புச் சொற்கள் இயல்பாக நின்று குறிப்புப் பெயரெச்சமா யிருக்குமென்றும், பண்புப் பெயராகும் போது மையீறு பெறுமென்றும், அறிதல் வேண்டும். செம், சேய்தீ, வெம், மெல், திண் முதலிய அடிச்சொற்கள், சிறு, புது முதலியனபோல, எளிதாய் அல்லது விளக்கமாய்ப் பொருளுணர்த்தாமைக்கு அவற்றின் வழக்கின்மை அல்லது அருகிய வழக்கே காரணம்.

Red, Smail, Remote முதலிய ஆங்கிலக் குறிப்புப் பெயரெச்சங்கள், **Ness** என்னும் ஈறுபெற்ற பின்னரே, **Redness, Smallness, Remoteness,** எனப் பண்புப் பெயராகும். அஃதன்றி, **Redness** என்னும் பண்புப் பெயரே **Ness** என்னும் ஈறுகெட்டு **Red** என நின்றது எனின், அதை ஆங்கில இலக்கணியரும் ஒப்புக்கொள்ளார். பிறமொழியாளரும் ஒப்புக்கொள்ளார். ஆகவே, 'ஈறுபோதல்' என்பது வழுப்படக் கூறலே என அறிக.

அஃதாயின், பண்புத் தொகைச் சொல்லிடையே 'ஆகிய' என்னும் பண்புருபு விரியுமாறெங்ஙனெனின், பண்புத் தொகைச் சொல் தொகையெனப் பெயர் பெற்றிருப்பினும், உண்மையில் ஒரு சொல்லுந் தொக்கதன்று என்றும், செம்மையான தமிழ், பனையாகியமரம் என்று விளக்க நடையில் விரித்துக் கூறும் வழக்கு நோக்கி, செந்தமிழ், பனைமரம் என்பன பண்புத்தொகையெனப்பட்டன வென்றும் மொழிநூலொட்டிய இலக்கணப்படி அது ஒரு மயக்கே என்றும் கூறி விடுக்க. சிவந்த நீர் என்னும் எளிய வழக்கில் எங்ஙனம் ஒரு சொல்லும் தொக்கிலதோ, அங்ஙனமே செந்நீர் என்னும் உயர்வழக்கிலும் என்க.

2. வினையிடைநிலை

(1) இறந்தகால இடைநிலை

"தடறவொற் றின்னே யைம்
பால் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி
லிடை நிலை."

என்றார் நன்னூலார்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல். 640)

என்றும், தனித்து நின்று பொருள் தராத இடைச் சொற்களும் ஒரு காலத்துத் தனித்து நின்று பொருள் தந்த பெயர் வினைச் சொற்களின் சிதைவே யென்றும் அறிவார்க்கு, த், ட், ற் என்னும் தனி மெய்கள் சொற்குறுப்பாய் நின்று பொருளுணர்த்தும் என்பது, நகையாடத் தக்க செய்தியாம்.

இறந்தகால வினைமுற்றுக்கள், மலையாளத்திற் போன்றே, முதற் காலத்தில் இற்றை இறந்தகால வினையெச்ச வடிவிலிருந்து பின்பு ஈரெண் ஐம்பாலீறுகளைப் பெற்றன வாதலின், அவற்றைப் பகுக்கும் போது முதற்கண் எச்சமும் ஈறு மாகவே பகுத்தல் வேண்டும்.

எ. டு.

செய்தான் - செய்து —ஆன்
படித்தான் - படித்து —ஆன்
உண்டான் - உண்டு —ஆன்
கொண்டான் -கொண்டு—ஆன்

கட்டான் - கட்டு —ஆன்
தின்றான் - தின்று —ஆன்
நின்றான் - நின்று —ஆன்
கற்றான் - கற்று —ஆன்

இங்ஙனம் பகுத்து நோக்குங்கால், எச்சத்தின் இறுதியில் நிற்பது அது என்பதன் முதற்குறையான துவ் விகுதியே என்பதும், அதுவே டுவ்வென்றும் றுவ்வென்றும் புணர்ச்சியால் திரிந்ததென்பதும், புலனாம்.

உள் — து-உண்டு என்பது போன்றதே கொள் — து-கொண்டு என்பதும். இல் — து-இன்று என்பது போன்றதே நில் — து-நின்று என்பதும்.

நிலைமொழியிற்றிலுள்ள ணகர ளகர னகர லகர மெய்கள், அது என்னும் விகுதியொடு புணரின் இயல்பாகவும், துவ்விகுதியொடு புணரின் முறையே டகர றகர மெய்களாகத் திரிந்தும் புணரும்.

எ. டு.

கண் — அது-கண்ணது
தாள் — அது-தாளது
அன் — அது-அன்னது
பால் — அது-பாலது
கண் — து -கட்டு
தாள் — து -தாட்டு
அன் — து -அற்று
பால் — து -பாற்று

புக்கான், சுட்டான், அற்றான் எனப் பகுதி யிரட்டித்து இறந்த காலங் காட்டிய வினை முற்றுக்களையும், புக்கு — ஆன், சுட்டு — ஆன், அற்று — ஆன் என எச்சமும் ஈறு மாகவே பகுத்தல் வேண்டும்.

புக்கான் என்பதில் க் எங்ஙனம் இறந்த கால இடைநிலையன்றோ, அங்ஙனமே படித்தான் என்பதிலும் த் இறந்தகால இடைநிலையன்று என அறிக.

இனி, 'உறங்கினான்', 'போனான்' முதலியன எங்ஙனம் புணர்ந்தன வெனின், அவையும் மேற்கூறிய வாறு எச்சமும் ஈறுமாகவே யென்றறிக.

எ. டு.

உறங்கி — ஆன்-உறங்கியான்-உறங்கினான்.
போயி — ஆன்-போயியான் - போயினான்.
போயி - போய் — ஆன்-போயான் — போனான்.

சொல்லாக்கத்தில் யகரம் நகரமாக (அல்லது னகரமாக)த் திரிதல் இயல்பு.

எ. டு. : யான் — நான், யாம் — நாம்.

சேரநாட்டுத் தமிழின் திரிபான மலையாளத்தில், ஆயி, போயி என்னும் இறந்தகால வினை வடிவுகளே இன்றும் வழங்குகின்றன.

2. நிகழ்கால இடைநிலை

நன்னூலார் கூறிய நிகழ்கால யிடைநிலை மூன்றனுள், ஆநின்று என்பது சரியன்று. அது செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சமும் அதனைத் தொடர்ந்த இறந்தகால வினை முற்றுமாகிய செய்யா நின்றான் என்னும் தொடரின் இடைநின்று தவறாய்ப் பிரித்துக்கொண்ட ஒரு சொற் பகுதியே. ஆநின்று என்பதும் ஓர் இடை நிலையேயெனக் கொள்ளின், உண்ணா கிடந்தான் என்னும் வழக்கினின்று ஆகிடந் தான் என்பதும் ஓர் இடைநிலை யெனக் கோடல் வேண்டும்.

இனி, உண்ணாகிடந்தான் என்பது எச்சமும் முற்றுமாக இரு சொல்லாயின் உண்ணாக் கிடந் தான் என்றிருத்தல் வேண்டுமாதலின், உண்ணா கிடந்தான் என இயல்பாய் நிற்கும் சொல் உண்ணா நின்றான் என்பது போல் ஒருவகை நிகழ்கால வினை முற்றேயெனின், அது ஆகிடந்து என ஓர் இடைநிலை வேண்டுவார் இடைக்காலத்துக் திரித்துக் கொண்ட வழக்கேயன்றித் தொன்றுதொட்டு வந்த மரபன்று எனக் கூறிவிடுக்க. செய்யா என்னும் வாய்பாட்டு எவ்வினைச் சொல்லும் நின்றான் என்பதனொடு என்றும் இயல்பாகவே புணருமாதலின், அதனோடொப்ப உண்ணாக் கிடந்தான் என்றிருக்க வேண்டு வதையும் உண்ணா கிடந்தான் என இயல்பாக்கிக் கொண்டனர் என்க.

செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், செய்யாநின்றான் செய்யாநிற்கின்றான், செய்யா நிற் பான் என முக்கால முற்றோடும் கூடிவருதலின், அவற்றுள் இறந்த கால முற்றோடு கூடியதை மட்டும் ஒரு சொல்லாகக் கொள்வது பொருந்தாதென்க.

இனி, செய்யா நின்றான் என்பது செய் கின்றான் என நிகழ் காலப் பொருளன்றோ தருகின்ற தெனின், அது ஒரு சாரார் ஆட்சி பற்றியதேயன்றிச் சொல் வகை பற்றியதன்றெனக் கூறி மறுக்க.

வெண்பாப் போட்டி-5.

ஈற்றடி :

போட்டாளே வேலையற்றுப் போய்

முடிவு தேதி 5-10-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

இரண்டு ரூபாய்...
ஐந்து ரூபாய்...
தமிழையே கற்று
தமிழுக்கே உழைத்து
தமிழ் வடிவில் இயங்கி,
கொள்கைப்பற்றுக் கொண்டு
தடியடிகளைத் தாங்கி,
வறுமையில் அவதிப்படும்
மாபெரும் புலவருக்குத்
தரக்கூடாதா ?
அண்ணா பொருளாளர்
நாவலர் செயலாளர்
விழாக்குழு உருவாகிறது.
உயிருள்ளபோதே மரியாதை.

நண்பர்களே,

பணம் வருகிறது.
பறந்து போகிறது.
சம்பாதிக்க ஓடுகிறோம்.
சம்பாதிக்கிறோம்.
செலவழிக்கிறோம்.
அதில் ஒரு ரூபாய்...

உங்கள் பங்கு ?
மனமிருந்தால் வழியுண்டு ;
மனம் இருக்கிறதா ?
செயல்படுத்துங்கள்.

நிதி அனுப்ப முகவரி :

சி. என். அண்ணாதுரை,
'அறிவகம்'
24, சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை-13.

3. எதிர்கால இடைநிலை

"பவ்வ மூவிடத்
தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை..." (144)

என்றார் நன்னூலார்.

முற்றும் எச்சமுமாகிய செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலப் பாற்பொது வினை, பால் பிரிந் திசைத்தற்கு வெவ்வேறு விகுதி களுடன் கூடிநிற்கும் நிலையில் நிலைமொழியீற்று மகரம் வகரமாக வும் சிலவிடத்துப் பகரமாகவும் திரியும். அத்திரிபால் வந்த மெய் நிலையே எதிர்கால இடை நிலை யென்றார் நன்னூலார்.

முற்றும் பாலீறும்

எ. டு. செய்யும்-ஆன் — செய்யுமான்-
செய்யுவான்-செய்வான்
செய்யும் — ஆர்-செய்யுமார் —
செய்யுவார்-செய்வார்
செய்யும்-அ-செய்யும — செய்யுவ-
செய்வ
உண்ணும்-ஆன் - உண்ணுமான் —
உண்ணுவான்
உண்ணும்-ஆன் - உண்ணுமான் —
உண்மான்-உண்பான்
தின்னும்-ஆன்-தின்னுமான் —
தின்னுவான்
தின்னும்-ஆன்-தின்னுமான் —
தின்மான்-தின்பான்
நடக்கும்-ஆன்-நடக்குமான் —
நடக்குவான்-நடக்கான்-நடப்பான்
படிக்கும்-ஆன்-படிக்குமான் —
படிக்குவான்-(படிக்கான்)-
படிப்பான்

படிப்பான் என்பதைப் படிப்பு-ஆன் எனப் பிரிப்பின் நன்றெனத் தோன்றும், ஆயின். தருவான் வருவான் என்பன தருவு - ஆன், வருவு - ஆன் எனப் பிரியாமையின், தொழிற்பெயரும் ஈறு மாகப் பிரிப்பதினும் முற்றும் ஈறு மாகப் பிரிப்பதே நன்றென வறிக. மேலும் செய்து செய்கின்று என்னும் ஏனை யிருகாலப் பண்டை முற்றுக்கள் போன்றே, செய்யும் என்னும் எதிர்கால முற்றும் பாலீறொடு புணர்ந்ததெனக் கோடல் பொருத்த முடைத்தாம்.

பெயரெச்சமும் பாலீறும்

எ. டு. செய்யும்-அவன்- செய்யுமவன்-செய்யுபவன்-செய்பவன்
செய்யும்-அது-செய்யுமது—
செய்யுவது-செய்வது
செய்யும்-அவை-செய்யுமவை;—
செய்யுபவை-செய்பவை

3. வடமொழி யாக்கம்

"இயற்சொல் திரிசொல்
திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள்
ஈட்டச் சொல்லே." (880)

"வடசொற் கிளவி
வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த
சொல்லா கும்மே." (884)

"சிதைந்தன வரினும்
இயைந்தன வரை யார்."
(885)

எனத் தொல்காப்பியர் கூறியதே மிகையாயிருக்க நன்னூலார்,

"பொதுவெழுத் தானுஞ்
சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும்
இயைவன வடசொல்."
"இடையில் நான்கு
மீற்றில் இரண்டும்
அல்லா வச்சை
வருக்க முதலீறு
யவ்வாதி நான்மை
ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்த
நாலேழுந் திரியும்." (146)

— 3-ம் பக்கம் —

கிராமிய இலக்கியம் தமிழகத்தின் பரம்பரைச் சொத்து!

—11-ம் பக்கத் தொடர்ச்சி—

வேலன் என்றதும் கன்னியின் தாய் அசந்துவிடுகிருள். வேலனு! மாட்டுக்காரன் மகன் வேலனு! என்று விஞ எழுப்புகிறது அவள் நெஞ்சம், சேச்சே அந்த அற்பச் சிறுவனிடமா தன் மகள் மனதைப் பறி கொடுத்தாள்? மனதைப்பறி கொடுத்ததுமல்லாமல் தன்னையே பாழ்படுத்திக்கொண்டாளே. வெட்கம்—வெட்கம் வெளியே தலைகாட்ட முடியாத வெட்கம். கொதிக்கிருள். கூறுகிருள் கொந்தளிப்புடன்,

மாடுமேய்க்கும் குப்பன்மகன்
மல்லன் சிறு வேலனிடம்
மனதைப் பறிகொடுத்த...
அடிபெண்ணே
மந்திரந்தான் என்னடியே.

கேவலம்; மாட்டுக்காரச்சிறுவனிடன் மனதைப்பறி கொடுப்பதா? அவமானம்—அவமானம். ஏற்றத் தாழ்வு என்னும் கருநாகம் படமெடுத்தாடுகிறது தாயின் வடிவில். உண்மைக்காதல் என்ற மகுடியினுல் பாம்பின் ஆவேசத்தை அடக்க முயலுகிருள் கன்னி என்ற பிடாரன்.

மந்திரம் ஏதுமில்லே
தந்திரமும் இல்லையம்மா
புந்தியிலே ஒன்றுபட்டோம்
...நாங்கள்
முந்தியிலே ஒன்றுபட்டோம்.

என்ன துணிவு! என்ன நிதானம்! தயங்காமல் கூறுகிருள் கன்னி. நாங்கள் மனத்தால் ஒன்றுபட்டோம். அதோடு முந்தானே விரித்து உடலாலும் ஒன்றுபட்டோம் என்றே கூறிவிடுகிருள்.

அன்று நாகரிகம் இன்றுள்ள மாதிரியில் முன்னேறவில்லே. அன்று சமுதாயம் இயற்கை நியதிகளுக்குப்பயந்து நடந்தது. வைத்தியத்துறையும் இன்றுள்ளது போல் அன்று முன்னேற்றம் அடைந்திருக்கவில்லே. ஒரே 'இஞ்செக்சன்' ஞல் கரு உருக்குலேந்துவிடும் என்ற தேவரகசியத்தை அக்கன்னியின் தாய் அறிந்திருக்க நியாயமில்லே. எனவே வேறுவகையில்லாமல் தாய் அதோடு சும்மா இருந்து விட்டாள். ஆனல் முன்புபோல மகளே வெளியே தோட்டம் துரவுகளுக்குத் தனியாக அனுப்புவதில்லே.

நாட்கள் நகர்ந்தன. ஏழு நாட்கள் ஏழு யுகங்களாகத் தெரிந்தது காதலர்களுக்கு. இளேஞனுல் அவளேப்பார்க்காமல் இருக்கமுடிய முடியவில்லே. அவள் மட்டும் அதற்கு விதிவிலக்கா? எப்படியும் வேலனேச் சந்தித்தே யாக வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தாள். தாய் தந்தையர் வீட்டிலில்லே. குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தாள். விரைந்தாள் ஊருணியை நோக்கி. கால்கள் என்னவோ ஊருணிப்பாதையில் நடந்துகொண்டிருந்தன. மனமோ வேலன் பால் நிறைந்திருந்தது. கண்களோ இருமருங்கிலும் தேடிக்கொண்டே இருந்தன. எதிர்பார்த்தது வீண் போகவில்லே. சொல்லி வைத்தாற்போல் பிள்ளேயார் கோவில் அரசடியில் பக்ததனேப் போல் பட்டைத் தீட்டிக்கொண்டு நின்றிருந்தான் வேலன். யாரும் அருகில் இல்லே. சந்தர்ப்பம் பக்க மேளம் கொட்டியது. உதடுகள் அசைகின்றன.

வேலி யழிந்ததென்று
விறகுக்கு நான் வருவேன்
கன்றுக்குட்டி தேடவென்று...
அடடடடா
கரையோரம் நீவருவாய்.

என்ன சொக்குப்பொடி போட்டானே? என் மகள் அந்தச்சிறுவன் விரித்த வலேயில் விழுந்துவிட்டாளே; என்ன மந்திரம் போட்டானே என் பெண் மயங்கிப் போய்விட்டாளே என்று வாலிப வர்க்கத்தின்மீது குற்றம் சாட்டும் பெண்ணேப் பெற்ற தாய்க்கு ஒரு நல்ல சூடுபோல நம் காவியக்குமரி யுக்தி சொல்லித் தருகிருள் ஆண் வர்க்கத்திற்கு. ஆண் மாத்திரம் பெண்ணே விரும்புவதில்லே; பெண்ணும் ஆணே விரும்புகிருள் என்பதை ஏனே சிலர் எண்ணுவதில்லே. போகட்டும்.

கன்னியின் அன்புக் கட்டளேயை ஆவலுடன் ஏற்றுக்கொள்ளுகிருன் இளேயோன். அவள் சொல்லிச் சென்றபடியே இருவரும் சந்திக்கிருர்கள். ஏரிக்கரை கருவேல மர நிழலில் என்ன நேர்ந்தது? ஏன் நீ கொல்லேக்காவலுக்கு வருவதில்லே என்று கேள்விகளே அடுக்குகிருன் வேலன்.

கோதை கூறுகிருள். நம் காதல் என் பெற்ருேர்களுக்குத் தெரிந்துவிட்டது. அது மாத்திரமல்ல; ஊரே நம்மைப் பற்றிப் பேசுகிறது. என்னுல் வெளியே தலேநீட்ட முடியவில்லே. ஊராரின் கொடுமொழிகளேக் கேட்டுக்கொண்டு இவ்வூரிலேயே இருக்கவும் என்னுல் முடியாது. நாம் இருவரும் ஒரு சாதியில் பிறந்திலேயாதலால் நம் கல்யாணத்தையும் இவ்வூர் மக்கள் ஏற்கமாட்டார்கள். அதனுல் நாமிருவரும் சேர்ந்து வாழ ஒரு யோசனே சொல்லவேண்டும் மச்சான் என்று-கேட்கிருள். வேலனுக்கு ஒரே குழப்பம். திகைப்பால் திண்டாடுகிருன். அவன் வாய் அடைத்துவிட்டது. எனவே கன்னியே தன் இறுதி முடிவைச் சொல்கிருள். அவள் மொழியில் உறுதி தொனிக்கிறது. ஆர்வம் பெருக்கெடுக்கிறது.

நீ கருப்பு நான்சிகப்பு
ஊரெல்லாம் ஓமலுப்பு
ஓமலுப்புத் தீர்ந்தவுடன்...
ஆசை மச்சானே
ஓடிப்போவோம் ரெண்டுபேரும்.

அன்பு மச்சானே! நம் இருவரின் பொருத்தத்தைப் பற்றி இவ்வூர் மக்கள் பொருமைப்படுகிருர்கள். கொஞ்சநாள் நாம் விலகி இருப்போம். ஊர் நம்மைப் பற்றி சிறிது மறந்துவிடும். எனக்கு அதிகக் கட்டுப்பாடும் இருக்காது. நாம் இருவரும் கண்காணுத தூரதேசத்திற்கு—இவ்வூர் மக்களின் கொள்ளிப் பார்வைக்கு எட்டாத ஒரு பிரதேசத்திற்குச் சென்று பிழைத்துக்கொள்ளலாம் என்று தீர்க்கமாக யோசனே கூறுகிருள் கோதை. வேறு வழியறியாத வேலனும் ஒப்புக்கொள்கிருன்.

காதலர்கள் குறித்துவைத்த திருநாளும் வந்தது. நடுநிசியில் திருடர்கள்போல் அரசமரத்தடியில் சந்திக்கின்றனர். உடுத்தியிருந்த ஆடையைத் தவிர எந்த உடமையும் இல்லே அவர்களிடம், ஊரை விட்டுப் புறப்படுகிருர்கள். கண்களிலே கண்ணீர். நெஞ்சத்திலே தன் நாட்டைப் பிரியும் வேதனே. வேதனே வெடிக்கிறது. வாய்விட்டுச் சொல்லுகிருர்கள்,

என்தாய் பொன்னுடே
எழில்மிகுந்த நன்னுடே
பின்னுமெப்பப் பார்க்கிறமோ?
...நாங்கள்
போகின்ருேம் இப்பொழுதே.

காதலர்களின் கால்கள் ஊரை விட்டுச் செல்லும் பாதையில் வேக நடை போட்டுக்கொண்டிருந்தன. எதிர்காலத்தைப் பற்றிய பெருந்துயரம் நிரம்பிய அவர்கள் நெஞ்சிலே பிறக்கப்போகும் தங்கள் குழந்தையைப் பற்றிய இன்பம், மேலோங்கியிருந்தது. இதுவரையிலும் மேகத்தில் மறைந்து நின்ற சந்திரன் மெதுவாக எட்டிப் பார்த்தது. தன்மானத்தைக் காப்பாற்ற தன்னூரை விட்டுச் செல்லும் புரட்சித் தம்பதிகளே வாழ்த்துவதற்கென்றே அந்த நிலவுத்தாய் எட்டிப் பார்த்ததுபோல் தோன்றியது. எனவே நாமும் வாழ்த்துவோம்.

—கு. சண்முகசுந்தரம்.

ஓர் முக்கிய அறிவிப்பு

'தென்றல்' சம்பந்தமான கடிதப் போக்குவரத்து, மணியார்டர், செக், டிராப்ட், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளே நிர்வாகி, 'தென்றல்' என்ற முகவரிக்கே அனுப்பவேண்டும். 'தென்றல்' சம்பந்தப்பட்டவைகளே 'முல்லே'யுடன் சம்பந்தப்படுத்தி எழுதவோ அனுப்பவோ கூடாது. அப்படி அனுப்பப்படுபவை கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நிர்வாகி : 'தென்றல்'.

★ ★ ★

—1ம் பக்கத் தொடர்ச்சி—

தமிழர் அணியை ஒன்று திரட்டும் போர்ப்பரணியாக அமைந்திருந்தது. திரண்டிருந்த மக்கட் பெருவெள்ளம் பூரித்துவிட்டது. **"இந்தியா முழுதும் பொது மொழியாக இருப்பதற்கு தகுதியுடைய மொழி தமிழ்மொழி. அந்த மொழியை, அந்த மொழிக்குரிய நாட்டிலே செல்வாக்கு இல்லாமல் செய்ய வேருெரு மொழியைப் புகுத்துவதென்ருல்...ஈதென்ன மதியீனம்!"**- பேராசிரியர் அவர்கள் இவ்வாறு முழக்கமிட்ட நேரத்தில் நீண்ட கையொலி அலே அலேயாகக் கிளம்பிற்று.

"வடக்கிலிருந்து வீசும் வாடைக்காற்றை சிறு சிறு குன்றுகள் தடுத்தன. ஆனுல் பல்லாவரத்தில் இருந்த மறைமலேதான் வடதிசை வாடை தமிழ்நாட்டுக்குள் நுழைய விடாமல் அறவே தடுத்து நிறுத்தியது. அந்த மறைமலே, இன்று, வேறு வேறு துறையில் இருப்பவர்களே, வேறு கொள்கைகளில் இயங்குபவர்களே தமிழர் என்ற முறையில் ஒன்று சேர்த்திருக்கிறது. தமிழர்கள் ஒன்றுபட்டு எதிர்த்து எது தோல்வி கண்டிருக்கிறது?" பேராசிரியர் அவர்களின் தேமதுரத் தமிழோசை கேட்டு மண்டபம் பெருமிதம் கொண்டது. ஒவ்வொருவரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அதே நேரத்தில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேச எழுந்தார்கள்.

நெடுஞ்செழியன் அவர்கள், சொற்பொழிவின் துவக்கத்தில் மறைமலே அடிகளாரின் துணிவைப் பாராட்டினர். "சுவாமி வேதாசலம் என்றிருந்த பெயரை **மறைமலே அடிகள்** என்று அவர் மாற்றிக்கொண்டார். அந்த நேரத்தில் எத்தனேயோ பேர் எதிர்த்தார்கள். கேலியும் கிண்டலும் செய்தார்கள். **'மறைமலே அடிகள் - மரம் - செடி - கொடிகள்'** என்று இகழ்ந்துரைத்தார்கள். இவ்வாறு எதிர்த்தவர்கள் யார்? **தூத்துக்குடியை 'டுட்டிக்கொரின்'** என்றும், சரித்திரப் புகழ் பெற்ற **தஞ்சையை டாஞ்சூர்** என்றும், **தரங்கம்பாடியை ட்ரங்பார்** என்றும், வெள்ளேக்காரன் அவனது மொழிக்கும் அவனது உச்சரிப்புக்கும் ஏற்ற வகையில் மாற்றிக்கொண்டபோது தலேயாட்டிக்கொண்டிருந்தவர்கள்தான் மறைமலே அடிகள் என்பதை மரம் - செடி - கொடிகள் என்ருர்கள். தூய தமிழ் அவர்களுக்குக் கேவலமாக இருந்தது. அந்தத் தூய தமிழ்தான் இன்று பல்வேறு கொள்கையினரை ஒன்றுபடுத்தியிருக்கிறது. இங்கு குழுமியிருக்கின்ற தமிழ்த் தலேவர்கள், தமிழ் காக்க என்ன கட்டளே இட்டாலும் அந்தக் கட்டளேயை நிறைவேற்ற நாங்கள் இருக்கிருேம். ஆயிரமாயிரம் இளேஞர்களேத் திரட்டித்தர நாங்கள் தயாராக இருக்கிருேம்" என்று உரையாற்றிப்புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 'சங்கு முழக்க'த்தைக் கூறி தமிழ்வைரிகளுக்குச் சூளுரைத்து முடித்தார். தமிழர்கூட்டம் மன நிறைவோடுகலேந்தது.

மறக்கமுடியாத இத்தகைய தமிழர் ஒற்றுமையை மறைமலே அடிகளார் ஏற்படுத்தியிருக்கிருர்கள். அவரைத் தமிழர்கள் மறக்கவில்லே என்பதற்கு, அவர் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்த தமிழை நாம் பாதுகாப்பதே அவருக்குச் செலுத்தும் மரியாதையாகும். ★

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

கு. மு. முருகேசன்,
சென்னை-10.

சங்ககாலத்தில் குறிப்பிடப்படும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள். குன்றெறிந்த முருகவேள் நிதியின் கிழவன் ஆகிய புலவர்களை, முறையே சிவபெருமான், ஆறுமுகக் கடவுள், குபேரன் என்று தெய்வங்களாக ஒரு இலக்கண விளக்குரையில் குறிப்பிட்டு உள்ளது. தயவு செய்து (அ) திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் குன்றெறிந்த முருகவேள் நிதியின் கிழவன் இவைகளுக்கு விளக்கம் கொடுக்கவும்.

முச்சங்க மரபில் கடைச்சங்கம் ஒன்று பற்றியே நமக்கு வரலாற்று முறையில் தெளிவான சான்றுகள் ஓரளவுகிடைத்துள்ளன. மற்ற இரு சங்கங்களுக்குச்சிலப்பதிகாரமும் அதன் உரைகளும், உரை மேற்கோள்களும் தரும் சான்றுகள் இல்லாவிட்டால், அவை பற்றிய கூற்றுக்கள் முழுவதும் புராணக்கற்பனை என்றே தள்ளி விடத்தக்கவையாயுள்ளன. இன்றும் அவற்றின் நடை, விவரம் முதலியவை பற்றி எதுவும் தெரியவில்லை. ஊகங்களே இனி ஆராய்ச்சிகளைத் தூண்டத்தக்கவை என்னலாம்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட மூன்று பெயர்கள் இடைக்காலத் தவரால் கடவுட் பெயர்களாக நமக்குக்கூறப்பட்டாலும், புலவர்கள் பெயர்தான் என்று எண்ண இடமுண்டு. ஆனால் இதை வலியுறுத்தக் காலம் நமக்கு உதவ வேண்டும், மேலும் சான்றுகள் கிட்ட வேண்டும்.

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் என்பது 'இறையனார்' என்பது போன்ற கடவுட் பெயருடைய புலவராய் இருக்கலாம். இறையனார் இயற்றிய 'அகப்பொருள்' ஏடும் அதற்குரிய நக்கீரனார் உரையும் இன்று நம்மிடையே உலவுகின்றன. இது கடைச்சங்க கால 'இறையனா'ராய் இருத்தல் வேண்டும். அதற்குமுன் முதற்சங்கத்திலும் இத்தகைய புலவர் இருந்திருக்கலாம்.

திருவள்ளுவருக்கு 'இறையனார்' 'செந்நாப்போதார்' என்ற பெயர்கள் உண்டு. அவர் முப்பால் நூலுக்கும் 'வேதம்' என்ற பெயர் உண்டு. திருவள்ளுவர் அவர் இயற்பெயரென்றும், அவரும் அவர் திருநூலும் கடைச்சங்க காலத்தே நிலவியதாகவும் நெடுங்காலம் நம்பப்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளரும் வேறு சான்றுகளற்ற நிலையில், அதன் காலத்தைக் கடைச்சங்க காலத்தை அடுத்தே தேடிவருகின்றனர். ஆயினும் திருவள்ளுவர் என்ற பெயர் இயற்பெயரல்ல என்றும், புனைந்துரைப் பெயர் என்ற முறையிலும் 'இறையனார்' போன்ற ஏதோ ஒரு பெயர் இன்னும் பழமையானது என்றும் கருத இடமுண்டு. கடைச்சங்கத்துக்கு முற்பட்டே, 'வேதம்' இயற்றிய 'இறையனார்' என்ற முறையில், அவர் பின்னாட்களில் கடவுளாகக் கருதப்பட்டு, சைவர் முழு முதற் கடவுளாகிய சிவபெருமானாகக் கற்பனை செய்யப்பட்டிருத்தல் கூடும் என்று நான் எண்ணுகிறேன்.

குறளாசிரியரே சாங்கிய முறையை முதலிலே வகுத்தமைத்த கபில தேவரென்றும், நாத்திக முறையை வகுத்தமைத்த பிரகஸ்பதி என்றும், முதற் கவிஞராகிய சுக்கிரதேவனென்றும் கூறியவர் இல்லாமலில்லை. அதற்கேற்ப இன்று சமஸ்கிருத நீதி நூல்களுள் ஒன்றாகிய சுக்கிர நீதி, வியக்கத்தக்க முறையில் திருவள்ளுவர் கருத்தும் முற்போக்குக் கொள்கையும் உடையதாய் இலங்குகிறது. பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்கள் மொழிபெயர்ப்புப் பதிப்பில் முன்னுரையில் திருக்குறளுடன் அதற்குள்ள ஒற்றுமைகளை எடுத்து விளக்கியுள்ளார்.

தொல்காப்பிய காலத்துப் பாண்டியன் நிலந்தரு திருவிற் பாண்டியன் புராணங்களால் ஆதிமனுவாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளான். அறம், பொருள், இன்பம் வகுத்த வள்ளுவரே இந்த ஆதிமனுவாகிய நிலந்தரு திருவிற் பாண்டியனாகக் கூட இருத்தல்கூடும்.

தமிழிலக்கணங்கள் முதனூலாசிரியராகக் கூறும் 'வினையின் நீங்கி விளங்கிய இறைவன்' கூடத் திருவள்ளுவராகவே இருக்கலாம். அவர் நூலாகிய திருக்குறளைத் தொல்காப்பிய காலத்திலேயே தமிழர் ஆதிவேதமாகக் கருதியிருத்தல் சாலும்.

கடைச்சங்க காலத்திற்குப்பின் கூடத் திருக்குறள் மட்டுமன்றி, நாலடியாரும் 'வேளாளர் வேதம்,' 'தமிழர் வேதம்' என்று போற்றப் பட்டதுண்டு. வேறொரு வேதம் அல்லது வேதங்கள் தமிழகத்தில் புகுத்தப்பட்டபின், தமிழர் வேதம் என்று முதலிலும், தமிழர் நீதிநூல் என்று பின்னரும் திருக்குறளின் படி நிலை குறைந்து வந்துள்ளது என்று கருத இடமுண்டு.

இங்கே கூறப்பட்டவை பெரும்பாலும் ஊகங்களே. ஆனால் மரபடிப்படையான, ஆராய்ச்சிக்கு முதல் தூண்டுதலான ஊகங்கள் ஆகும். மேலும் சான்றுகள் கிட்டினால், இவ்வூக ஆராய்ச்சிகள் புதிய உண்மைகளுக்கு வழிகோலலாம். ஆனால் இன்றைய நிலையில்கூட, பரந்த உலக ஒப்புமையாராய்ச்சிகள் இதற்கு வலியுறவு தருகின்றன. 'வள்ளுவர் நிழல்', 'இன்பத்துள் இன்பம்' என்ற இரு நூல்களில் இவ்வூகங்களைச் சுற்றிய ஒப்புமை, கருத்து விளக்கங்களைத் தந்துள்ளேன். மேலும் இவ்வழி சிந்தித்தற்குரியர், தற்கால ஆராய்ச்சிகளின் குறைபாடுகள் உணர்ந்தோர்!

★

உ. நடராசன்,
அழகியபாண்டியபுரம்.

வள்ளல்கள் எழுவரில் ஒருவரான "பேகன்" தன் இல்லக்கிழத்தி 'கண்ணகி'யை விட்டுப் பிரிந்து, வேறொரு மகளிருடன் இருந்த காலை கபிலர், பரணர் அரிசில்கிழார் ஆகிய புலவர்கள் பேகனின் கூடா ஒழுக்கத்தைக் கூறி நல்வழிப்படுத்தியதாகப் புறம் 143, 144, 145 பாடல்களால் தெரிகிறது. இந்தக் கண்ணகி சிலப்பதிகாரக் கண்ணகியின் மறுபதிப்புதானா? "சிலப்பதிகாரம்" உண்மையில் நடந்த கதைதானா?

பேகன் இல்லக்கிழத்தியான கண்ணகிவேறு, சிலப்பதிகாரக் கண்ணகிவேறு. ஒரு பெயருடன் பலர் அன்றும் உண்டு, இன்றும் உண்டு. கண்ணகியின் மறுபதிப்பு பேகன் மனைவி என்று ஓரளவில்—சிலம்புக்கண்ணகி போன்ற கற்புடையவள் என்று மட்டிலும் கூறுவதில் தடையில்லை. கணவன் இறந்ததாக அறியும் வரை கண்ணகி கற்பாற்றியிருந்த பண்பைப் பேகன் மனைவியிடமும் காண்கிறோம்.

சிலப்பதிகாரம் உண்மையில் நடந்ததுதானா என்ற கேள்வி எழுப்பியவரும் கற்பனைக்கதைதான் என்று நிலைநாட்ட முயன்றவரும் உண்டு. ஆனால் இரண்டும் சங்ககாலச் சூழல் பற்றிய அவசர முடிவுகளால் நேர்ந்தவை. சிலப்பதிகாரம், கவிஞன் கவிதைக் கற்பனை உருவில் தரப்பட்ட வரலாற்றுக் காவியமே என்பதை காவியம் தரும் வரலாற்றுச்சான்றுகளும், காவிய உறுப்பினருள் முக்கியமான செங்குட்டுவனுடன் ஆசிரியருக்கிருந்த தொடர்புமே காட்டும்.

பிற சங்கப்பாடல்கள், குறிப்பாகப் பதிற்றுப்பத்து, செங்குட்டுவன் இளவலான இளங்கோவடிகளைப்பற்றிக் கூறவில்லையே என்பதுதான் கேள்விக்கு அடிப்படையான தூண்டுதல். சிலப்பதிகாரக் கதையின் இயற்கை மீறிய நிகழ்ச்சி வருணனைகளும் இதற்கு உதவியுள்ளன என்பதில் ஐயமில்லை.

இவற்றையடிப்படையாகக் கொண்டு, சிலப்பதிகார முழுவதும் கற்பனையென்று கூறுவார் கூற்றுக்கள் மாயகாலச்செப்படி வித்தைபோலவே உள்ளன. அவை ஆராய்ச்சியாகக்கொள்ளத்தக்கவையல்ல. ஏனென்றால் அவையும் நம்பத்தகாத கற்பனைகளாக முடிகின்றன. 'கதையும் கற்பனை. அதை எழுதிய இளங்கோவடிகளும் கற்பனை' என்று அவர்கள் கூறுகிறார்கள். பிற்காலத்து யாரோ ஒருவர், தம்மை இளங்கோவடிகளாகக் கற்பனை செய்து எழுதினாரென்பது நம்பத்தகுந்த கட்டுக்கதையாகக்கூட அமையவில்லை. நானூறு ஆண்டுகளுக்குப் பின் உண்மை வரலாறு இவ்வளவு நுட்பமாகத் தெரிந்திருப்பதே அருமை. அதைக்கற்பனை செய்து ஒருவர் எப்படிக் கண்டிருக்க முடியும்?

புலவர் பலர் கேள்வி கேட்டவர் ஐயங்களை ஓரளவு ஏற்று, சிலப்பதிகாரம் சங்க காலத்திலேயே பிற்பட்டோ, சங்க காலத்துக்குச்சிறிது பிற்பட்டோ இருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் கதை கற்பனை என்று கருதவில்லை.

அதுவும் சூழலுக்குப் பொருந்தாது. ஏனென்றால் கதையும் கற்பிதமல்ல ஆசிரியரும் கற்பிதமல்லரென்றால், செங்குட்டுவன் தம்பியாகிய ஆசிரியர், அவர் காலத்தில், அதாவது சங்ககாலத்தில்தானே இருந்திருக்க முடியும்?

சங்கப்பாடல்களின் நடைக்கும், சிலம்பின் நடைக்கும் உள்ளவேறுபாடு கண்டு காலத்தை ஐயுறுபவர் உண்டு.

இவையனைத்தும் இனி ஆராய்ந்து உண்மைகாணப்பட வேண்டியவை. செங்குட்டுவனைப் பாடிய புலவர், அவன் தம்பி பெரும் புலவராயிருந்து பாடாததற்கும் காவிய நடை சங்க கால நடையாயில்லாததற்கும் வேறு விளக்கங்கள் சங்ககாலச் சூழலில் தேட வேண்டும். வேறு விளக்கங்கள் கட்டாயம் காணப்படும். அவை தமிழாராய்ச்சியை இன்று இருக்கும் நிலையிலிருந்து மேலும் ஒருபடி கொண்டு செல்லத்தக்கவையுமாகும்.

சங்கப்பாடல்களாலும் தொல்காப்பியத்தாலும் அறிய முடியாத 'முத்தமிழ்' மரபு விளக்கத்தையும், 'முச்சங்க' மரபு விளக்கத்தையும் சிலம்பு அறிவிப்பதொன்றே அது கற்பனையன்று, காலத்தால் பிற்பட்டதன்று என்று நிறுவப் போதுமானதாகும்.

அடுத்த இதழில்

பன்மொழிப் புலவர்

எழுதும்

இதுதான் திராவிட நாடு

என்னும்

தொடர்கட்டுரை ஆரம்பமாகிறது!

அரசியல் நாட்குறிப்பு

நம்பியார் தோற்ருர் !

13-9-57ம் தேதியன்று திரு.வெங்கட்ரமணய்யர் தலைமையில் வக்கில் சங்கக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இந்தித் திணிப்பைப் பற்றி கார்சாரமான வாதம் நடைபெற்றது.

திரு. செல்லச்சாமி அவர்கள், இந்தியைத் திணிப்பதால் நாட்டின் ஒற்றுமை சீர்குலையுமென்றும், இந்தியல்லாத மொழியினரின் உணர்ச்சிகளைப் புறக்கணிக்கக் கூடாதென்றும் பேசி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். திரு. ஏ. ராமச்சந்திரன் அந்தத் தீர்மானத்தை ஆதரித்தார்.

பிரபல வழக்கறிஞர் என். டி. ஜி. நம்பியார் அவர்கள் தீர்மானத்தை எதிர்த்தார். இந்தி தேசிய மொழியாதலால் அதற்கு ஊக்கம் தர வேண்டும் என்றும் அப்போதுதான் தேசிய ஒற்றுமை ஏற்படுமென்றும் பேசினுர். முடிவில் நம்பியார் அவர்களின் தீர்மானம் தோல்வியுற்றது.

அடினுர் வெற்றி

மேற்கு ஜர்மனியில் மூன்ருவது முறையாக டாக்டர் அடினுர் ஞாயிறன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். அவருக்கு வயது 81. தனிப்பட்ட சக்தி மேற்கு ஜர்மனியில் சமதர்மக் கொள்கையுடைய ஒரு கூட்டு சக்தியைத் தோற்கடித்தது விந்தைக்குரியதென்று உலக அரங்கில் பேசிக்கொள்ளப்படுகிறது.

497 உறுப்பினர்கள் கொண்ட பார்லிமெண்டில் பிரதமர் அடெனுரின் கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சி 270 இடங்களைக் கைப்பற்றி விட்டிருக்கிறது. பழைய பார்லிமெண்டில் 13 இடங்களே அதிகம் பெற்றிருந்த அடினுருக்கு சமீபத்திய தேர்தலில் மெஜாரிடி 43க்கு உயர்ந்திருக்கிறது.

கருப்புக்கொடி

செப்டம்பர் 15ம் தேதியன்று கேரளத்தில்–தலைச்சேரிக்கு அருகே குத்துப்பிரம்பா என்ற கிராமத்தில் ஒரு விருந்தில் கலந்துகொள்ள மந்திரி கே. பி. கோபாலன் அவர்கள் போனபோது அவருக்குக் கருப்புக்கொடி காட்டப்பட்டது.

பிரஜா சோஷியலிஸ்ட்காரர்களும், பீடித் தொழிலாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திஞர்கள்.

ரஷ்யாமீது கண்டனம்

அங்கேரியில் ரஷ்யா செய்த கொடுமைகள் குறித்து செப்டம்பர் 15ம் தேதி ஐ. நா. அவையில் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேறியது. இந்தத் தீர்மானத்துக்கு 60 நாடுகள் ஆதரவும், 10 நாடுகள் எதிர்ப்பும் தெரிவித்தன. இன்னும் பத்து நாடுகள் நடுநிலைமை வகித்தன.

பாங்க் ஊழியர் வேலை நிறுத்தம்

விலைவாசி உயர்வு காரணமாக தங்களுடைய சம்பளங்களில் 25% உயர்வு வேண்டி, கல்கத்தாவிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள சுமார் 9000 பாங்க் ஊழியர்கள் 17-9-57 முதல் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

ஆட்சியில் சேனுதிபதி

தாய்லாந்தின் அதிகாரத்தைக் கைப்பற்றிய சேனுதிபதி பீல்டு மார்ஷல் ஸாரிட், நாடு முழுவதும் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளார். துருப்புகள் முழுதும் தலைநகரத்துக்குள் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளன. சென்ற ஒரு திங்களாக ராணுவத்திற்கும், சர்க்காருக்குமிடையே பலமான தகராறு நடைபெற்று வந்தது. இறுதியாக சேனுதிபதி தலைநகரத்துக்குள் துருப்புகளைக் கொண்டுவந்து அதிகாரத்தைக் கைப்பற்றினுர். ஓடிப்போன பிரதமர் சாங்காரம் தானே சரணடைய வேண்டுமென்றும் சேனுதிபதி உத்தரவிட்டுள்ளாராம்.

புறப்பட்டார் !

சென்ற செப்டம்பர் 17-ம் தேதியன்று இந்திய சர்க்கார் நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி டெல்லியிலிருந்து விமான மூலம் அமெரிக்காவுக்கு புறப்பட்டார்.

அமெரிக்காவில் அவர் ரூ. 300 கோடி கடன் வாங்குவதற்காக பேச்சு வார்த்தை நடத்துவார்.

சந்திப்பு

சென்ற செப்டம்பர் 17-ம் தேதியன்று ஹைதராபாத் நகரில் பிரஜா–சோசலிஸ்டு கட்சியின் பழைய தலைவரான ஜெயப்பிரகாசரும், சோஷலிஸ்டு கட்சி தலைவர் லோகியாவும் சந்தித்தனர். இவர்கள் ஏற்கனவே லக்னே நகரில் சந்தித்து பேசியது குறிப்பிட தக்கது. பி. சோ. கட்சியையும், சோசலிஸ்டு கட்சியையும் ஒன்ருக இணைப்பது பற்றி ஜெயப்பிரகாசரும், லோக்கியாவும் லக்னேவில் பேசினுர்கள். ஆனுல் முயற்சி தோல்வி அடைந்தது.

இப்போது லோக்கியாவை மீண்டும் சந்தித்துப் பேசுவது அரசியலைப்பற்றிப் பேச அல்ல என்று ஜெயப்பிரகாசர் கூறினுர்.

முல்லை

செப்டம்பர் இதழ் விற்பனையாகிறது !

★

★ செங்காந்தள்

பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் எழுதிய அற்புதமான குறுநாவல். இனம் கடந்து, மதம் கடந்து எழுந்த காதல் உணர்ச்சிகளின் படப்பிடிப்பு. 17-ம் நூற்ருண்டில் நடந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த காதல் கதை.

★ இலக்கியம்

பேரழகி ஒருத்தியின் எண்ண அலைகளை இலக்கியமாகத் தீட்டியிருக்கிருர், பேராசிரியர் **நா. பாண்டுரங்கன்** அவர்கள். அத்தனையும் தத்துவங்கள் ! அழகைப்பற்றிய தத்துவங்கள்.

★ ஆட்டனத்தி ஆதிமந்தி

ஆசிரியர் கண்ணதாசன் எழுதிய **ஆட்டனத்தி —ஆதிமந்தி** காதல் காவியம், இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது.

மற்றும்

முடியரசன், தங்கப்பா, பி.ஏ., பி.டி., **சிந்தாமணி,** பி.ஏ., **தயானந்தன் பிரான்சிஸ்,** பி.ஏ., (ஆனர்ஸ்) **தென்னரசு, தமிழ்ப்பித்தன், இளஞ்சேரன், இசையமுது, உடுமலை தாமரைச்செல்வன், மு. சண்முகம்** ஆகியோர் எழுதியிருக்கிருர்கள்.

96 பக்கங்கள் :: விலை அணு எட்டு

அடுத்த "முல்லை" அக்டோபர் முதல் வாரத்தில் எங்கும் கிடைக்கும்.

"முல்லை" :: சென்னை-6.

திரு. எஸ். இராமலிங்கம் மறைவு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மாமனுரும், டாக்டர் விசாலாட்சி அவர்களின் தந்தையாருமான திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் 10-9-57 இரவு 8-45 மணிக்கு பூவிருந்தவல்லியில் இயற்கையெய்திஞர் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிருேம்.

திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் சேலத்தில் பெருங்குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலேயே எஞ்சினியரிங் படிப்பை முடித்து, சென்னை மாநிலத்தில் பல இடங்களில் எஞ்சினீயர் வேலை பார்த்தார்.

அவர் நேர்மைக்கும், நாணயத்திற்கும், திறமைக்கும் பெயர் போனவர்.

இறுதியாக 1943-ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டம் வேலூரில் முனிசிபல் எஞ்சினீயராக இருந்து ஓய்வுபெற்ருர்.

இப்பொழுது அவருக்கு வயது 71 ஆகும்; அவர் மனைவி மாணிக்கத்தம்மாள் அவர்களையும், டாக்டர் விசாலாட்சி, ஞானசுந்தரி, நடராசன் ஆகிய மக்களையும், விட்டுப் பிரிந்துவிட்டார். அவர் சென்ற ஒன்னரை ஆண்டு காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

திரு. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களும், திரு. எம். எஸ். பிஞகபாணி எம். ஏ. அவர்களும் அன்ஞருக்கு மருமக்களாவர்.

அன்ஞரின் பிரிவால் துயருறும் டாக்டர் விசாலாட்சி அவர்கட்கும், அவரது உற்ருர் உறவினர்கட்கும், நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிருேம்.—ஆ-ர்.

அன்னமே, தாராவே அயலார்கள் பெற்ற கண்ணே!

என்னவென்று சொல்வேனடி-எம்மனத்து ஆசையெல்லாம்!

— 2-ம் பக்கம் தொடர்ச்சி —

நறிப்பிடுகிறாள். இதைக் கேட்டுக்கொண்டு எந்தத் தமிழ் இளைஞனாவது ஒதுங்கிப் போய்விடுவானா? ரோசம் பிறக்கிறது இளைஞனுக்கு. ஆவேசமும் வருகிறது. என்றாலும் காரியத்தைச் சாதிக்கவேண்டுமல்லவா? அதற்குப் பொறுமையல்லவா முக்கியம். எனவே பொறுமையாகவும் நிதானமாகவும் சொல்லுகிறான் கேளுங்கள்.

மாடுதான் போனாலென்ன!
வான்பயிர்தைஅழித்தாலென்ன?
நீ குளிக்கும் மஞ்சளுக்கு...
அடியடியே
நின்னுதவம் செய்கிறேண்டி.

பாடல் நாடோடிப் பாடல்தான். அதில்தான் என்ன தெளிவு. சுளுவான முறையில் இளைஞனின் மனக்கருத்தை எளிய சிறிய அடிகளிலே தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகிறார் ஆசிரியர். "அடியடியே நீ குளிக்கும் மஞ்சளுக்கு நின்னு தவம் செய்கிறேண்டி" என்னும் போதே; அடி பேதைப் பெண்ணே! நீ நினைத்ததுபோல் நான் இன்னும் சிறுவன் அல்ல. ஆண்மை நிரம்பிய வாலிபன். இப்பொழுதாவது தெரிந்துகொள் என்பதுபோல அடிவரிசையிட்டுத் தன் ஆண்மையைக் காட்டிக்கொள்ளுகிறான். மாடுகள் எங்கு வேண்டுமானாலும் போகட்டும். மாந்தோப்பிற்குள் புகுந்து அங்கு அருமையாக வளர்க்கப்பட்டு வரும் வான்பயிற்றையே அழித்து நாசமாக்கட்டும். ஆனால் நான் இன்று இந்த இடத்தைவிட்டு நகருவதில்லை என்று அடம்பிடிக்கும் வகையில் தன் கருத்தை வெளியிடுகிறான்.

இளைஞனின் ஆணவப் பதில் மங்கையைத் தயங்கவைக்கிறது. என்னடா, நாம் இவனை சிறுபிள்ளை என்றல்லவா நினைத்தோம்; நம் ஏமாற்றுவித்தை இவனிடம் செல்லாதுபோல் தோன்றுகிறதே, இனி இவனிடம் வீராப்புப் பேசிப் பயன் பெறமுடியாது; கெஞ்சித்தான் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கிறாள். கன்னியும் பிடிவாதக்காரிதான். இளைஞனின் வரட்டுப் பிடிவாதத்திற்குப் பயந்தில்லை அவள் தன் பிடிவாதத்தைத் தளர்த்திகொள்ள நினைத்தது. அவன்பால் ஏற்பட்ட நூதனமான ஒரு பாசமே அவ்வித எண்ணத்திற்கு அவளைத் தூண்டியது. இதோ தன் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறாள் இளைஞனின் முன்னிலையில்.

நான் குளிக்கும் மஞ்சளுக்கு
நல்ல தவம் செய்பவரே
மீன் பிடிக்க வேண்டுமென்றால்
...அடடடடா
தான் மறைந்து நிற்க
வேண்டும்.

இளைஞனின் எண்ணத்தை முழுதும் அறிந்து கொண்டாள் கன்னி. தனது எண்ணத்தையும் தெரியப்படுத்த வேண்டுமல்லவா? அதனால் ஏமச்சா! உன் மீது எனக்கு அடங்காத ஆசை; இப்பொழுதே என் கழுத்தில் ஒரு தாலிக்கயிறைக்கட்டி விடு என்று சொல்லிவிட முடியுமா? அப்படி எடுத்த எடுப்பிலேயே பெண் தன் சம்மதத்தைத் தெரியபடுத்தி விட்டால் பெண்மைக்குத் தான் மதிப்பேது? வாலிப சமுதாயம்தான் பெண்ணினத்தை மதிக்குமா? அவருக்காக தன் வாழ்வையே பாழாக்கிக்கொள்ளத்தான் முற்படுவார்களா? எனவேதான் தன் விருப்பதை மெதுவாகச் சொல்லுகிறாள். மீனாகிய நான் உனக்கு வேண்டுமானால், நான் தண்ணீருக்குள் எத்தனை நேரம் நிற்கிறது; கரைக்கு வரவேண்டாமா? அதனால் நீ சற்று அப்பால் சென்று விடு; நான் கரைக்கு வந்து புடவையுடுத்திக்கொள்ளுகிறேன். என்கிறாள்.

ஆகா! சுரம் 106 டிகிரியிலிருந்து திடீரென்று 98. 4 டிகிரிக்கல்லவா இறங்கி விட்டது. முதல் கல்லிலேயே பழம் விழுந்துவிட்டது; புழுவில்லாமலே மீன் தூண்டியில் மாட்டிக்கொண்டது. இளைஞனின் மனத்திலே உவகை கூத்தாடுகிறது. சொல்லாக வெளிவருகிறது.

கனிச்சாறே கட்டமுதே
கானகத்து மாமயிலே
தனிச்சிருந்து பேசவேண்டும்...
அடியடியெ
தையல் கொடி நீவாடி.

பாட்டின் ஆசிரியர் எழுதப்படிக்கத்தெரியாத அண்ணாவிதான் ஆனால் பாட்டில் கையாண்ட உவமையைப் பாருங்கள். கனிச்சாறும், கட்டு அமுதாம்—கானகத்தில் தோகை விரித்தாடும் மாமயிலாம்; இப்படியெல்லாம் சொல்லி, நான் உன்னுடன் தனியாகப்பேச வேண்டியிருக்கிறது, நீ புடவையுடுத்திக்கொண்டு வா என்று கூறிவிட்டு சற்று தூரயிருந்த மாமரத்தடிக்குச்சென்று விடுகிறான். கன்னியும் அவன் சொன்னபடியே செல்லுகிறாள். என்னென்னவோ பேசத்துடித்துக் கொண்டிருந்த இளைஞனின் வாய் கன்னிவந்ததும் அடைத்துப்போய்விட்டது. வெகு நேரம் மௌனமாகவே இருந்தான். கன்னியால் இந்த நீண்ட மௌனத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. இயற்கையாகவே அவள் சற்று துடுக்குக்காரி. எனவே அவளே பேச்சைஆரம்பிக்கிறாள். எண்ணம் பாடலாக வெளிவருகிறது.

தனித்திருந்து பேசுதற்கு
கனிந்துரைத்து வந்த மச்சா
புன்னை மரமான தென்ன...
அடடடடா
புத்தி தடுமாறுதோடா?

மௌனம் கலைகிறது. தடைபட்டிருக்கும் ஆண்மையைத் தூண்டிவிட பெண்மை பேசுகிறது. "என் வண்ண அழகிலும், பருவப் பொலிவிலும் மயங்கி விட்டதால் புத்தி தடுமாறுகிறதா?" என்று அடங்கியிருக்கும் ஆண்மையின் ஆசையை அதிகப்படுத்திவிடுகிறாள். சொல்லாமல் சொல்லுகிறாள். தடைப்பட்டிருந்த வெள்ளத்திற்கு ஒரு சிறு உடைப்பே போதும். எவ்வளவு பலமான அணையாயினும் உடைத்தெறிந்துவிடும் வெள்ளம். தடைப்பட்டிருந்த ஆண்மைக்கு கன்னியின் வார்த்தை ஒரு உடைப்பாக உதவியது. ஆண்மை வெள்ளம் கொந்தளிக்கிறது. ஆசை அலைகள் பெண்மையெனும் கரை நோக்கிப் பாய்கிறது.

அன்னமே தாராவே
அயலார்கள் பெற்றகண்ணே
என்னவென்று சொல்வனடி...
அடியடியே
எம்மனத்து ஆசையெல்லாம்.

அடியன்னப்பறவையே நீ என் மாமன் மகள் அல்ல. நானும் உன் அத்தை மகன் அல்ல. உனக்கும் எனக்கும் எவ்வித உறவு முறையும் இல்லை. இவ்வாறிருக்க உன்மேல் நான் கொண்ட தீராத ஆசையெல்லாம் எவ்வாறு நான் எடுத்துச் சொல்லுவது என்கிறான் காளை. காளையின் உள்ள உணர்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவி.

பெண்கள் உண்மையாகவே பேதைகள் தான் என்பதை சில நிகழ்ச்சிகள் நிரூபித்துவிடுகின்றன. புகழ்ச்சியை விரும்பாத பெண்களே கிடையாது என்று சொல்லலாம். தன்னை ஒரு ஆண், "நீதான் உலகத்திலேயே சிறந்த அழகி; உன்னைக் காட்டிலும் அழகுள்ள ஒரு பெண்ணை நான் கண்டதே இல்லை; காணவும் முடியாது, என்று சற்று உயர்த்திக் கூறிவிட்டால் போதும், பெண் உச்சாணிக்கிளையில் ஏறி உட்கார்ந்துவிடுகிறாள். தன்னை அவ்வளவு உயரத்திற்கு ஏற்றிய அந்த ஆடவனுக்கு தன் நெஞ்சத்தில் தனியாக ஒரு இடத்தை ஒதுக்கித் தருகிறாள். சுருங்கச் சொன்னால் அவனுக்கு அடிமையாகிவிடுகிறாள். நம் கதையில் வரும் கன்னியும் அதற்குச் சான்றாக விளங்குகிறாள். அவளே தன் உள்ளத்தை திறந்து காட்டுகிறாள் பாருங்கள்.

ஆசைக்குகந்த மச்சா
அன்பெனுக்குத் தந்த மச்சா
பாசமிகுந்த மச்சா...
ஆசை மச்சானே
பச்சமெல்லாம் உம்மேலே.

மனம் ஒன்றுபட்டது. ஆசை வெள்ளம் கன்னியின் மனக்கடலை நிறைத்திருந்தது. அதுவே மேலே சொன்ன பாடல்.

சிற்றோடைக்கரை மாமரத்தடியில் அப்புதுக் காதலர்கள் பேசினார்கள். பேசிக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் அன்புப் பேச்சுக்களில் சாதி சமயத்தைப் பற்றி ஒரு வார்த்தையும் இடம் பெறவில்லை. இன்ப நினைவுகளில் மயங்கிக்கிடந்ததால் கலியாணம் என்ற சொல்லையே மறந்திருந்தனர். எதிர்கால வாழ்க்கையில் சமுதாயம் குறுக்கிடுமே என்ற எண்ணமே எழவில்லை. அவர்கள் நெஞ்சில் நிறைந்திருந்ததெல்லாம் இன்பம். ஒரே இன்பமயம்.

இவ்வாறு கன்னியும் காளையும் பல நாட்கள் சந்திக்கிறார்கள். மாதங்கள் பல சென்றன. எத்தனை நாளைக்குத்தான் கள்ளச் சந்திப்பு வெற்றிகரமாக நடந்துவரமுடியும்? ஒருநாள் இல்லையேல் மற்றொரு நாள் சமுதாயத்திற்குத் தெரிந்துதானே யாக வேண்டும்.

எதிர்பார்த்தது நடந்துவிட்டது. அவர்கள் களவொழுக்கம் சமுதாயத்தின் கொள்ளிக் கண்களுக்குத் தெரிந்தே விட்டது. புகார் பறக்கிறது கன்னியைப் பெற்ற தாயிடம். கன்னியின் உருமாற்றம் அதற்கு சாட்சி சொல்லுகிறது. தாயை மறைத்தொரு சூல் இருப்பதில்லை. இருக்கவும் முடியாது. விவரத்தைப் புரிந்துகொண்ட தாய் மெதுவாகக் கேட்கிறாள்.

நாலாறு மாதமாக
நான்சுமந்து பெற்ற கண்ணே!
பால்நிலவு போன்ற முகம்...
அடிபெண்ணே
பசலைநிறம் ஆன தென்ன?
சிறுகுடமும் தாங்காமல்
சிலையாகும் உன்னிடைதான்
உருமாற ஞாயமென்ன?...
அடிபெண்ணே
உள்ளபடி சொல்லவேண்டும்.

தாய் காரணங்-காட்டி சாதுரியமாகக் கேட்கிறாள். மறுக்கமுடியுமா கன்னியால்? மறைக்கத்தான் வழியுண்டா? சொல்ல வேண்டியிருந்த சங்கதிதான். இப்பொழுது தாயே கேட்டுவிட்டாள். சந்தர்ப்பம் ஒத்து வந்தது. துணிகிறாள். நிதானமாகவே சொல்லுகிறாள்.

பத்துமாதம் சுமந்து
பாங்குடனே பெற்றவனே
இத்தனைநான் மறைத்ததற்கு...
அடியம்மா
என்தாயே மாப்புவேணும்.
பொறுப்பற்றுப் போகவில்லை
பொல்லாங்கு நேரவில்லை
கல்லாங்குப் பன்னத்திலே...
காளையுடன்
கருத்தொன்று பட்டனடி.

மகளின் கடந்தகால செய்கையை வெகு நன்றாகப் புரிந்துகொண்டாள் தாய். அனுபவசாலியல்லவா? என்றாலும் யார் இவளைக் கெடுத்திருக்க வேண்டும். இவள் சொல்லும் அந்தக் காளை யாராக இருக்கும்? அவன் தன் இனத்தைச் சேர்ந்தவன்தானா? இல்லையா? என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளத் துடிக்கிறாள் தாய். அவள் மனக் குமுறல் கேள்வியாக ஒலிக்கிறது.

கைபடா மாம்பழத்தை!
கற்கண்டுத் தேன்சுளையை!
நெய்யுருக்கும் வெண்ணைதனை
...அடிபெண்ணே
மையப்பற்றிக் கொண்ட
தாரோ?

கைபடாத மாம்பழமாம். கற்கண்டும் தேனும் கலந்த பாகில் துவைத்தெடுத்த பலாச்சுளையாம் தன் மகள். அப்படிப்பட்ட தன் மகளைக் கொள்ளை கொண்டவன் யார்? ஒளியாமல் சொல்லிவிடு என்று கேட்கிறாள்.

மறைக்க முடியாது. மறைத்தாலும் பயன் இல்லை. எனவே கன்னி கூறிவிடுகிறாள்.

கல்லாங்குப் பன்னத்திலே
கருத்தொத்துப் போனதினால்
மல்லனவன் வேலனுடன்...
நான்
சல்லாபம் செய்ததுண்டு.

நான் நேசித்தவன் சாதாரணமானவன் அல்ல. நல்லமல்லன். அம்மல்லனும் நானும் கருத்தால் ஒன்றுபட்டோம் உடலாலும் ஒன்றுபட்டோம் என்று கூறி அவன் பெயரையும் சொல்லிவிடுகிறாள் மாடுமேய்க்கும் வேலன் என்று.

— 8ம் பக்கம் —



3. கொந்தளிக்கும் மக்கள் குணம்.

சுட்டுப் பொசுக்கிடினும் சூழ்ச்சிபல செய்திடினும்
வெட்டி வதைத்திடினும் மாருது-மட்டில்லாச்
சொந்தமொழி சோர்வடைய வந்தமொழி வாழ்ந்திடுமேல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—வே. இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

❁

ஆழ்கடலும் மூண்டெழுந்து அண்டமெலாம் வீசுபுயல்
சூழ்ந்தாட்டும் பெற்றிதனைச் சுட்டிடுமே-வாழ்வாரைக்
கொன்றழித்து வாழும் கொடுங்கோல் அரசதனுல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—எஸ். பி. ராசகோபாலன், சிகம்பட்டி.

❁

முடிமன்னர் முத்தரையர் முந்திநன் காண்ட
படியிற் சிறந்தநற் பண்பார்-மிடியில்லா
நந்தமிழ் நாட்டை நயனிலார் ஆண்டக்கால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—அழகைமன்னன், இராசபாளையம்.

❁

நாட்டின் நிலையறிந்து நல்லபணி யாற்றிடவே
நீட்டிக்கை பேசிட்டார் நின்றுமிக-'ஓட்'டெடுத்து
வந்தவர்க ளெல்லாம் வையத்தில் மாறுவரேல்
கொந்தளிச்கும் மக்கள் குணம்.

—மா. கண்ணன், கோர்க்காடு.

❁

பாராளும் மன்னரென்றும் பாராரே; பண்பிழந்தால்,
வேரோடு சாய்த்திடுவார் வேல்விழியே!-ஆராய்ந்தால்,
சந்ததமுந் தொந்தரவைத் தந்தவரைப் பந்தாடும்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—"முத்தூரான்". பொள்ளாச்சி.

❁

ஆட்சியையும் ஆட்டாதோ? ஆகாச் செயல்நடக்கும்
காட்சிக்குத் தீர்ப்பளித்துக் காட்டாதோ?-மாட்சிபெறச்
செந்துளிகள் தந்தேனும் செந்தமிழைக் காவாதோ ?
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—எஸ். அப்துர் ரகிமான், மதுரை.

❁

வெற்றுப் பேச்சல்ல வீரரெமைத் தேர்ந்தெடுப்பின்
உற்றுநனி ஆற்றிடுவோம் உங்களுக்கே-சுற்றத்தீர்
இந்தமுறை சொன்னோர்; இயல்முறையில் வேறுபடின்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—ஆர். குழற்கோ, கோர்க்காடு.

❁

தில்லிப் பெரியோய்! திருவிடத்தின் சீர்மையினைச்
சொல்லிக் கொடுத்தும்நீர் சோர்வடைந்தீர்-நில்லாது
முந்திக் கொடுக்க முரண்செய்தால் தென்னகத்தில்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—பெ. வேலு, தாரமங்கலம்.

❁

நாட்டுக்கு வேண்டுவது நல்லரசே என்றிட்டால்
'நோட்டு'க்கு வாக்கெடுப்பர் நுண்மதியர்!-'ஓட்'டிடுங்கால்
சொந்தப் பெருமதிக்கா? சோறளிக்கும் நல்நிதிக்கா ?
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—மொழியழகன், காரைக்குடி.

❁

நீதி சமமுரைப்பார் 'நேருசர்க்கார்' தொண்டரென்பார்
நீதிலாத் தென்னகத்தைத் தேய்ப்பாரிப்-பேதத்தால்
வெந்தழலின் தீப்பொறியாய் வீறுகொண் டெம்மருங்கும்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—குளிரெழிலன், சாலைப்புதூர்.

❁

சொன்னோம்; தெரியவில்லை; சொல்லவும் சொல்லில்லை
இன்னுத கண்டோம் இதுவரையில்-இன்னுமா
செந்தமிழர் சீரழிவு ! இந்தநிலை நீடித்தால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—நா. திருநாவுக்கரசன், மாயூரம்.

❁

காங்கிரசு ஆட்சியிலே கண்ட பலனென்ன ?
பாங்குடனே பெற்றிட்ட பாழ்வரியும்-தாங்குகுளிர்
கந்தைக்கும் வக்கில்லை காசினியில்; எண்ணிட்டால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—அ. பாலுசாமி, தண்ணீர்ப்பந்தல்பாளையம்.

❁

இந்தியெனும் நஞ்சுக் கிரையாகோம் ! நாடாளும்
மந்திரிகாள் ! தென்குடியை வஞ்சித்தால்,-சிந்தையெலாம்
வெந்துருகித் தீயாகி வெடித்தே எரிமலையாய்க்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

❁

மக்கள் கதறட்டும் மாதரசி விம்மட்டும்
பொக்கைவாய்ப் பெற்ரோர் பொறுமட்டும்-கெக்கலித்து
வந்தவரை வீழ்த்தாமல் வாரேன் அதுவன்ரே
கொந்தளிக்கும் மக்கள் குணம்?

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

❁

கற்றறிந்த மக்களொடு கற்பு மனைவிதனைப்
பெற்றிருந்தும் தந்தை-பரத்தையரைப்-பற்றுவனேல்
சொந்த மனைவியுளம் சோகமுறும்; சூழ்கடல்போல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

❁

வெம்பகையை வெல்லும்; விடுதலையை மேற்கொள்ளும் !
அம்பியற்கண் மாஞர் அகம்விழையும்-செம்மையிலாச்
சிந்தையரைக் கொல்லும்; திருவிடத்தைச் சார்ந்தாளும்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—ப. தாமரைச்செல்வன், பெசவாடா.

❁

ஆட்சி நெறியி லறம்பிழைத்தல் காணுவரேல்
மீட்சியுற நன்னெறியே மேன்மையுற-ஓச்சுமுயிர்
தந்தேனும் நாடு தனைக்காப்பர் அஃதன்ரே
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—ச. சவகர்லால், காரைக்குடி.

❁

குற்றமொடு கோலோச்சும் கோன்வலியைக் கொன்றொழிக்கும்,
உற்றமொழி, நாடினையும் உய்விக்கும்,-குற்றமிலாப்
பந்தம் பலகாக்கும், பட்ட குறைவிலக்கும்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—ம. நீலன், வாங்கல்.

❁

ஐந்தாண்டுத் திட்டம் அறிவித்தீர்; ஏய்த்துவிட்டீர்;
இந்தா வரியென்றீர்; ஈரமிலீர்-இந்தியையும்
எந்தமிழர் கற்கவென்றீர்; இக்கொடுமை மாய்ந்தொழியக்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—வே. திருவேங்கடம், இராதாபுரம்.

❁

அண்ணுவின் தம்பி அறிவுருவச் 'சம்பத்'தெம்
எண்ணம் அவையில் எடுத்துரைத்தார்-பண்டிதரே !
தந்திடுவீர் எங்கள் தனிநாட்டை; இல்லையெனில்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—'மதியரசன்', பெத்தநாய்க்கன்பாளையம்.

❁

இந்திதனைத் தென்னகத்தில் ஏய்த்து நுழைப்பதற்கே
முந்துகின்ற மந்தமதி மூடர்காள்!-சிந்தியுங்கள்
விந்தியத்தின் தென்திசையில் வேற்றுமொழி வந்துவிட்டால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—'பரளித்தம்பி', நாமக்கல்.

❁

அந்தகனே யானுலும் அமர்க்கண்ணுய்; அன்னைமொழி,
சொந்தமெனக் கொள்ளானே சொல்லிடுவாய்-நந்தமிழைத்
தந்திரத்தால் கொல்லத் தலைப்பட்டால் நிச்சயமாய்க்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.

—பா. சு. மணியன், முத்தூர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.